இதழ் 351
09 ஆகஸ்ட் 2025
18 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

SUBSCRIBE US! youtube.com/@IlakkuWeb2.0
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1

## செம்மணி மனிதப் புதைகுழி



## நீதிக்கான நீண்ட பயணம்

விதுரன்








© 2025 இலக்கு இணையம்

## மட்டு ஆரையம்பதி பிரதேச சபை மீண்டும் தமிழரசுக் கட்சி வசமானது



மட்டக்களப்பு மண்முனைப் பற்று ஆரையம்பதி பிரதேச சபைக்கான புதிய தவிசாளராக, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காத்தலிங்கம் செந்தில்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தவிசாளரைத் தெரிவுசெய்வதற்கான கூட்டம், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மி மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோரின் பிரசன்னத்தில், சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, புதிய தவிசாளருக்கான முன்மொழிவை உள்ளூராட்சி ஆணையாளர் கோரினார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் காத்தலிங்கம் செந்தில்குமார் முன்மொழியப்பட்டார்.

தவிசாளருக்கான வேறு தெரிவுகள் இன்மையால், ஏகமனதாக மண்முனைப்பற்றின் தவிசாளராக செந்தில்குமார் தெரிவு செய்யப்பட்டார்.

பிரதேச சபையின் உப தவிசாளருக்கான பதவி தற்போது காலியாகியுள்ளதால், மீண்டும் குறித்த பதவிக்கான வெற்றிடம் தொடர்பான அறிவிப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, பின்னர் தெரிவு இடம்பெறும் என உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முன்னர் தெரிவுசெய்யப்பட்ட தவிசாளர் த. மாணிக்கராஜா அண்மையில் காலமானதன் காரணமாக, இந்த புதிய தவிசாளர் தெரிவு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் காற்றாலை விவகாரம்: திட்டத்தை உடனே நிறுத்துக – ரவிகரன் எம்.பி

கடந்த யுத்தகாலத்தில் அரசால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள், அரசுப் படைகள் குண்டுவீசி தாக்குதல் மேற்கொண்ட நிலையைப் போல, கடந்தகால அமைச்சரவை அனுமதி அளித்த இந்த காற்றாலை மின்உற்பத்தித் திட்டத்தை மன்னார்த் தீவினுள் மேற்கொள்வதற்கு இடமளித்தால், மன்னார்த் தீவின் நிலை மிக மோசமாகப் பாதிக்கப்படும் என மக்கள் அஞ்சுவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே, மக்கள் ஏற்றுக்கொள்ளாத இத்திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் 07.08.2025 அன்று இடம்பெற்ற, மன்னார்த் தீவு காற்றாலை மின்உற்பத்தித் திட்டப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இந்த விவகாரத்தைப் பொறுத்தவரையில், காற்றாலை மின்உற்பத்தித் திட்டத்தின் மீது மன்னார் மக்களுக்கோ, மன்னாரைச் சார்ந்த பொதுஅமைப்புகளுக்கோ எந்தவித எதிர்ப்பும் இல்லை.

ஆனால், பாதிப்புகள் ஏற்படும் என்பதாலேயே, மன்னார்த் தீவினுள் இந்த காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்களை அமைக்க வேண்டாமென மன்னார் மக்களும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ஊடகவியலாளர் குமணனை பயங்கரவாத தடுப்புப் பிரிவு விசாரணைக்காக அழைப்பு




ஊடகவியலாளர் குமணன், காணாமல் போனோரின் உறவுகளின் போராட்டங்கள், நில அபகரிப்பு மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி போன்ற செய்திகளை தொடர்ச்சியாக களத்தில் நின்று வெளியிட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினால்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## 18,500 குழந்தைகள் இஸ்ரேலிய இராணுவத்தால் படுகொலை - அமெரிக்க செனட்டர்



காசா பகுதியை பஞ்சம் வாட்டி வதைக்கும் வேளையில், இஸ்ரேலுக்கு அமெரிக்கா தொடர்ந்து இராணுவ உதவி செய்வதாகவும், அமெரிக்க மக்களின் வரிப்பணம் குழந்தைகளை கொல்லவும், பட்டினியால் வாட்டவும் பயன்படுத்தப்படுகிறது எனவும் அமெரிக்க செனட்டர் பெர்னி சாண் டர்ஸ் தெரிவித்துள்ளார்.

காசாவில் 18,500 குழந்தைகள் இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர். இந்த போர்க் குற்றங்கள் நடைபெற்று வருகின்ற போதும், அமெரிக்கா போருக்கு 22 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமாக நிதி வழங்கியுள்ளது. “எங்கள் வரி செலுத்துவோர் டாலர்கள் குழந்தைகளை பட்டினியால் கொல்லவும், பள்ளிகளில் குண்டு வீசவும், உதவிக்காக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இந்தியாவுக்கு எதிராக மேலும் பல தடைகள் – ட்ரம்ப் சபதம்



ரஷ்யாவிலிருந்து எண்ணெய் கொள்முதல் செய்ததற்காக புது டில்லி கூடுதல் அபராதங்களை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது என்று அமெரிக்க தலைவர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த வியாழக்கிழமை (7) தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு எதிராக “இன்னும் நிறைய” தடைகளை விதிக்க ட்ரம்ப் சபதம் செய்திருக்கிறார். ரஷ்யாவிலிருந்து எண்ணெய் கொள்முதல் செய்ததற்காக இந்தியா “இன்னும் நிறைய” தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று ட்ரம்ப் கூறியுள்ளார். அவை இரண் டாம் நிலை வரிகளின் வடிவத்தில் இருக்கலாம் என்பதைக் குறிக்கிறது.

ரஷ்யாவுடனான அதன் தொடர்ச்சியான எரிசக்தி வர்த்தகத்திற்காக தெற்காசிய நாட்டிற்கு கூடுதலாக 25% வரிகளை விதிக்கும்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## பதவி இழக்கும் இன்ரெல் நிறுவனத்தின் தலைமை அதிகாரி

### அடுத்து சுந்தர் பிச்சையா?



இன்ரெல் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி லிப்-பு டானின் சீனாவுடனான உறவுகள் குறித்த செய்திகளைத் தொடர்ந்து, அவர் பதவி விலக வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த வியாழக்கிழமை (7) கோரியுள்ளார். நிறுவனம் விற்பனை வீழ்ச்சியை சந்தித்தபோது, அதனை மீட்கும் முயற்சியாக மார்ச் மாதம் டான் அமெரிக்க சிப் தயாரிப்பு நிறுவனத்தின் பொறுப்பை ஏற்றிருந்தார்.

“தலைமை நிர்வாக அதிகாரி மிகவும் சர்ச்சைக்குரியவர், உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும்.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## அமெரிக்கா – ரஸ்ய அரச தலைவர்களின் சந்திப்புக்கான இடம் உறுதி செய்யப்பட்டது




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான சந்திப்புக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் “பொருத்தமான” இடமாக இருக்கலாம் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

அடுத்த வார தொடக்கத்தில் இரு ஜனாதிபதிகளுக்கும் இடையே நேரடி சந்திப்பு நடைபெறலாம் என்று கிரெம்லின் கடந்த வியாழக்கிழமை (7) தெரிவித்துள்ளது.

மாஸ்கோவில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைவர் முகமது பின் சயீத் அல் நஹ் யானுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து, பத்திரிகையாளர்களிடம் புடின் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

ட்ரம்புடன் உச்சிமாநாட்டிற்கான இடம் குறித்து கேட்டபோது, ரஷ்யாவிற்கு உதவத் தயாராக

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## மனிதப்புதைகுழி விவகாரம்: சட்ட மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வலியுறுத்தல்

மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதுமான செயன்முறைக்குத் துணையளிக்கக்கூடிய சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுமாறு நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவினால், நீதியமைச்சர் ஹர்ஷனநாணயக்காரவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் உண்மை மற்றும் நீதியை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய மறுசீரமைப்புகள் தொடர்பில் நாம் பல தசாப்தகாலமாக வலியுறுத்தி வருகின்றோம். அந்தவகையில், மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் இலங்கையின் கடந்தகால வன்முறைகளுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

மனிதப் புதைகுழி விவகாரத்தில், தடயவியல் ஆய்வு உள்ளிட்ட அரசின் நடவடிக்கைகளைப் பாராட்டுவதோடு, இவ்விடயத்தில் உண்மையை கண்டறிவதற்கும், நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிய நிபுணத்துவமும் வளங்களும் உடனடியாக தேவைப்படுகின்றன. அதற்கமைய, மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதுமான செயன்முறைக்குத் துணையளிக்கக்கூடிய சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவும், அவற்றின் இயலுமையை வலுப்படுத்தவும் கோருகின்றோம்.

வட மற்றும் கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி இயங்கிவருபவர்கள் உள்ளிட்ட, இதனுடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினரிடம் நடத்தப்பட்ட நேர்காணல்களில் சில முக்கிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அவை:

- தடயவியல் நிபுணத்துவத்தை வலுப்படுத்தல்
- சுயாதீனமாக மரபணு பரிசோதனையை மேற்கொள்ள அவசியமான வளப்பகிர்வு மற்றும் மறுசீரமைப்புகளுக்கான நடவடிக்கைகள்
- சுயாதீன விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர்வதற்கான நகர்வுகள்
- மனிதப் புதைகுழி அகழ்வின்போது உரிய நியமங்களைப் பின்பற்றப்படுவதை உறுதிசெய்தல்
- மனிதப் புதைகுழி அகழ்வு மற்றும் விசாரணை செயன்முறைகளில் சர்வதேச கண்காணிப்பு மற்றும் ஒத்துழைப்பைச் சேர்த்துக்கொள்ளல்
- பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான உளவியல் சார்ந்த உதவிகளை வழங்கல்
- பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய செயன்முறையைப் பயன்படுத்தல்
- விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர்வதற்கான வளங்களை ஒதுக்கீடு செய்தல்

வலிந்து காணாமலாக்கப்படல்கள், மனிதப் புதைகுழி அகழ்வுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய விவகாரங்கள் தொடர்பில், காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய கட்டமைப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், இக்கட்டமைப்புகளின் செயற்பாடுகளில் எவ்வித அரசியல் தலையீடும் மேற்கொள்ளப்படாதிருப்பதை உறுதிப்படுத்தவும், அவை சுயாதீனமாக இயங்குவதற்கான அவசியமான வளங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**ஆசிரியர் தலையங்கம்**

இலக்கு

## இன்றைய உலகின் மாற்றங்களும் அதில் ஈழத்தமிழர் இறைமையை மீளுறுதி செய்தலும்

கடந்த வாரத்தில் அமெரிக்க அரசுத் தலைவரின் வரிவிதிப்புப் போரில் இந்தியாவுக்கான அமெரிக்க இறக்குமதிப் பொருட்களின் வரி 50 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதில் 25 வீதம் இந்தியாவுக்கு அது ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்ததற்கான தண்டனை வரியாக விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு பெரும் பொருளாதாரச் சவாலை தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில் "ரஷ்யாவின் அரசுத் தலைவர் புடின் இந்தியாவுக்கு விரைவில் நேரடி வருகை தந்து உச்சநிலைக் கருத்தரங்குகளை நடாத்தி அடைய வேண்டிய இலக்குகளின் எல்லைகள் குறித்த விவாதங்களைச் செய்யவுள்ளதாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு அறிவுரையாளர் டோவல் ரஷ்யாவில் வைத்துக் கூறியுள்ளார். ரஷ்யாவின் தேசிய பாதுகாப்புச் சபையின் செயலாளர் அமைச்சர் சேர்கை சைகூ இந்திய-ரஷ்ய நட்புறவு காலத்தால் பரிசோதனைகளுக்கு உட்பட்டு உறுதியான நட்பு" என்று வர்ணித்துள்ளார். "ஒருவரை ஒருவர் மதித்தல், நம்பிக்கை, ஒருவர் மற்றவரது ஆர்வங்களைச் சமமாகக் கருதி ஒன்றுபட்ட செய்பணி நிரல்களை உருவாக்குதல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட இருதரப்பையும் முற்றாகப் பலப்படுத்தத் தக்க விசேட முன்னுரிமை தந்திரோபாய பங்காண்மைகளை உருவாக்குதல் மொஸ்கோவுக்கு முக்கியமானதாக உள்ளது" என்று ரஷ்யாவின் தேசிய பாதுகாப்புச் சபையின் செயலாளர் அமைச்சர் சேர்கை சைகூ விளக்கிக் கூறியுள்ளார். அத்துடன் "புதிய அதிக நீதியும் நீண்டகால மேம்பாட்டுக்கானதுமான உலக முறைமையைத் தோற்றுவித்து அனைத்துலக சட்டங்களை உறுதிப்படுத்தி கூட்டாகப் புதிய சவால்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள ஒத்துழைப்புடன் செயற்பட நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்." எனவும் அமைச்சர் சேர்கை சைகூ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இந்திய ரஷ்ய நட்பு பலம்பெறும் சூழலில் ரஷ்யாவைக் கொண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியா ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான அமைதி வளர்ச்சிகளை மேம்படுத்தும் எந்த முயற்சியையும் அனுமதிக்காது என்ற துணிவில் சிறிலங்கா ஈழத்தமிழர்கள் மேலான தனது கட்டுப்பாடுகளைச் சகல நிலைகளிலும் மேலும் இறுக்கமடையச் செய்யும் செயற்பாடுகளை வேகப்படுத்தும் என்பது வெளிப்படையான உண்மை. அதே வேளை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி சீனாவுக்கு இம்மாதக் கடைசியில் நேரடியாகச் செல்லவுள்ளார் என்ற ஆரம்பச் செய்தியும் வெளியாகியுள்ளது. இதன்வழி சீன ரஸ்ய இந்திய துணையுடன் சிறிலங்கா தனது ஈழத்தமிழர்களின் இறைமை ஒடுக்கத் தேசிய நீக்கத் திட்டங்களை வேகப்படுத்துகையில் ஈழத்தமிழர்கள் அதற்கான சனநாயக வழி எதிர்வினைகளை எவ்வாறு செய்யலாம் என சிந்தித்துச் செயற்பட வேண்டிய நேரமிது என்பதை இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

கூடவே பிரித்தானியப் பாராளுமன்ற அறிக்கையில் இந்தியாவும், சீனா, எகிப்து, எரித்திரியா, ஈரான், பாகிஸ்தான், ரஸ்யா, பஹ்ரைன், ரூவாண்டா, துருக்கி, சவூதி அரேபியா, மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் எமிரேட்ஸ் ஆகியவற்றுடன் சேர்த்தது பிரித்தானியாவில்"நாடு கடந்த அடக்குமுறைகளில்"ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதை இந்திய வெளிவிவகார அமைச்சின் குரல்தரவல்ல பேச்சாளர் ரந்தீர் ஜைஸ்வால் முற்றுமுழுதாக நிராகரித்துள்ளார். இச்செய்தியும் கூட மேற்குலக ஆசிய விரிவாக்கங்களைத் தடுப்பதற்கான ஆசிய கோட்டை என்கின்ற பாதுகாப்புக்கட்டமைப்புக்கு ஆசிய நாடுகள் தாங்கள் விரும்பியோ விரும்பாமலோ தங்களைக் கட்டமைக்கின்றன என்பதைத் தெளிவாக்கி வருகின்றன. இதற்குள் சிறிலங்காவையும் இவை தம்மோடு இணைப்பதற்கான ஆர்வங்களை வெளிப்படுத்துகையில் அதனைச் சிறிலங்கா தனது ஈழத்தமிழின அழிப்புக்கான சாதகமான காலமாகப் பயன்படுத்தும் பேரபாயம் தோன்றக் கூடுமென்பதால் ஈழத்தமிழர்களின் இறைமையினை அவர்கள் மீளுறுதி செய்வதற்கான சமகாலப்பெருந்தடையாக இவை அமையும் என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது. இதனை எவ்வாறு ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளப் போகின்றார்கள்? ஈழத்தமிழர்களின் தாயக உலக தேசிய ஒருமைப்பாடு ஒன்றே இதற்கான ஒரே பாதுகாப்புக்கவசம் என்பது இலக்கின் தெளிந்த முடிபு.

அதே வேளை, சிறிலங்கா தமிழர் தாயகம் முழுவதையும் தனது 2009 இல் இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து ஈழத்தமிழரின் தேசிய விடுதலைப்போராட்டத்தை முப்பதொரு ஆண்டுகள் முன்னெடுத்த ஈழத்தமிழரின் நடைமுறையரசை முறியடித்தது போல இஸ்ரேல் காசா நீள்கரை முழுவதையும் தனது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தனது இராணுவக்கட்டுப்பாட்டை காசா முழுவதும் முழுமைப்படுத்தும் செயற்பாடுகளைத் கடந்த வாரத்தில் தொடங்கியுள்ளது. இந்நிலையில் சிறீலங்கா இஸ்ரேலுக்கும் இலவச விசா முறையை அறிமுகம் செய்துள்ளது. இது யுத்தக்குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் மனித உரிமை வன்முறைகள் செய்த இஸ்ரேலியப் படையினர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தங்களுக்கான பாதுகாப்பான காலனி ஒன்றை அமைக்கத் தொடங்கியுள்ளதை மேலும் வலுப்படுத்தும் என்று இலங்கையில் உள்ள முஸ்லீம் தலைவர்கள் சிலர் கடந்த வாரத்தில் அச்சமாக உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளனர். முஸ்லீம் மக்களுக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கும் இதனால் பெரும்பாதிப்புக்கள் ஏற்பட இடமுண்டு.

அவ்வாறே சிறிலங்கா அமெரிக்க வர்த்தகப் போரில் தனக்கு விதிக்கப்பட்ட 44 வீத வரியினை 30 வீதமாகவும் பின்னர் 20 வீதமாகவும் குறைப்பதற்கு எத்தகைய சலுகைகளை பாதுகாப்பு நிலையில் அமெரிக்காவுக்கு அளித்துள்ளது என்ற சந்தேகமும் கடந்த வாரத்தில் சிங்கள கட்சிகளிடை எழுப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தியாவுடன் செய்யப்பட்ட ஏழு ஒப்பந்தங்கள் மற்றும் சீனாவுடன் செய்யப்பட்ட பதினாறு ஒப்பந்தங்கள் தொடர்பான இத்தகைய கேள்விகளைச் சிங்களச் சமூகம் எழுப்பி வருகிறது. இந்த பாதுகாப்பு ஒப்பந்தங்களில் ஈழத்தமிழர் தாயகப் பகுதியின் சொந்தமான இலங்கைத் தீவைச் சுற்றியுள்ள இந்துமாக்கடலின் பெரும்பாகம் தான் முக்கிய இடம்பெறும் என்பதையே ஈழத்தமிழர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய நேரமிது.

இந்நிலையில் சீனா தற்போது சிறிலங்காவின் ஆட்சியாளர்களாக உள்ள தேசிய மக்கள் சக்தியினர் அடுத்த பத்து பதினைந்து வருடங்களுக்குத் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்தாலே உரிய மாற்றங்களை கொண்டு வரலாம் என தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரில்வின் டி சில்வாவுக்குத் தெரிவித்ததாக அவர் கடந்த வாரத்தில் வெளியிட்ட தகவல் தேசிய மக்கள் சக்தியும் முன்னைய ஆட்சி நீடிப்பாளர்களான சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜே அர் ஜயவர்த்தனா வழியில் ஆட்சி நீடிப்புச் செய்யும் ஆட்சியாளர்களாக மாறுவதற்கான முன்னறிவிப்பாக அமைகின்றது.

கடந்த வாரத்தின் நிகழ்வுகள் எல்லாமே இன்றைய உலகின் மாற்றங்கள் ஈழத்தமிழரின் இறைமையை மீளுறுதி செய்யும் ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான தடைகள் அதிகரிப்பதற்கான அனைத்துலக மற்றும் உள்நாட்டு சூழ்நிலைகளையே உறுதி செய்கின்றன. இந்நிலையில் உலகின் சிறுதேசஇனமாக உள்ள ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலகெங்கும் எவ்வாறு தங்கள் இறைமையை மீளுறுதி செய்யும் தொடர் தேசியப் போராட்டத்தை முன்னெடுக்கப் போகிறார்கள் என்பது இன்றைய முக்கிய கேள்வியாக இலக்கு கருதுகிறது. இதற்கான கருத்தியல் தெளிவை வளர்க்கும் வகையில் "இன்றைய உலகின் மாற்றங்களும், அதில் ஈழத்தமிழர் இறைமையை மீளுறுதி செய்தலும்" என்கிற சிந்தனைகளையும் கருத்தாடல்களையும் இம்மாதத்தில் ஊடகங்கள் வளர்க்க வேண்டுமென்பதே இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது. இந்த சிந்தனை தெளிவுடனேயே செப்டம்பர் மாத மனித உரிமைகள் ஆணைக்குழு விவகாரங்களையும் ஈழத்தமிழர்கள் அணுக வேண்டுமென்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# செம்மணி மனிதப் புதைகுழி





# நீதிக்கான நீண்ட பயணம்

**விதுரன்**

செம்மணி பகுதியில் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல – 01' மற்றும் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல – 02' என்று நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் இதுவரையில் கட்டம் கட்டமாக 41 நாட்கள் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



இவ்வாறான நிலையில் கடந்த 6ஆம் திகதி புதன்கிழமையுடன் இரண்டாம் கட்டத்தின் இரண்டாவது அங்க அகழ்வுகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் 133 எலும்புக் கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், 147 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.



குறித்த தனிமன்று, சிசுவொன்றின் எலும்புக்கூடு முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டமையானது, உணர்வுபூர்வமாக இருந்ததோடு குழந்தைகளையே படுகொலை செய்து புதைக்குமளவுக்கு குரூரமான மனோநிலை காணப்பட்டிருக்கின்றது என்ற விடயம் உலகையே உறையச் செய்திருக்கிறது.

அதுமட்டுமன்றி, நீல நிற பாடசாலை புத்தகப் பை, பால் சூப்பி உள்ளிட்ட சான்றுப் பொருட்களும் இறுதியாக மீட்கப்பட்ட சிசுவின் எலும்புக்கூட்டுத்தொகுதியும் இன்னும் எத்தனை அவலங்கள் புதையுண்டு இருக்கின்றன என்ற பெருங்கேள்விகளையும் வெகுவாகவே எழுப்பியிருக்கின்றன.

எதிர்வரும் 14ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினம் ஸ்கான் அறிக்கை மற்றும் மண் பரிசோதனை அறிக்கை என்பவை சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செம்மணி மனிதப்புதைகுழி விடயத்தில் 1996இல் கிருசாந்தி குமாரசுவாமியின் படுகொலை ஒரு தனிப்பட்ட குற்றமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், பின்னர் 1995-96 காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் காணாமலாக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களின் மரணத்துடன் நேரடியாக இணைந்துள்ளமையானது வெளிச்சத்துக்கு வந்திருந்தது. அண்மைய காலத்தில் மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை அந்த விடயத்தினை உறுதிப்படுத்தி வருகின்றன.



ஆகவே, செம்மணி மனிதப் படுகொலை என்பது வெறுமனே தனிப்பட்ட படைவீரரின் வன்முறைச் செயல் அல்ல, மாறாக, இலங்கை அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்.குடாநாட்டில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட மனித குலத்துக்கு எதிரான மிலேச்சத்தனமாகும். நிறுவனமயப்படுத்தப்பட்ட, இன அழிப்பிற்கான அடையாளமாகும்.

அத்துடன், இந்தப் புதைகுழியானது, நீதியை நிலைநாட்டுவதில் உள்நாட்டு அரச கட்டமைப்புக்கள் கொண்டிருந்த அரசியல் விருப்ப மின்மையையும், பொறுப்புக்கூறலின்மை எவ்வாறு ஒரு தொடர்ச்சியான பிரச்சினையாக இருந்து வருகின்றது என்பதையும் அம்பலப்படுத்தி நிற்கிறது.

யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்ற 18 வயது கிருசாந்தி குமாரசுவாமி, தனது இறுதிப் பரீட்சை முடிந்து வீடு திரும்பும் வழியில், செம்மணி சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு, பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்டார்.

கிருசாந்தி வீடு திரும்பாததால், அவரைத் தேடிச் சென்ற அவரது தாய், சகோதரர், மற்றும் அயல்வீட்டுக்காரர் ஆகியோரும் செம்மணி சோதனைச் சாவடியில் காணாமலாக்கப்பட்டனர். பின்னர் அவர்களும் படுகொலை செய்யப்பட்டு, கிருசாந்தியுடன் அதேயிடத்தில் புதைக்கப்பட்டனர். இந்த வழக்கில் மரண தண்டனையை எதிர்நோக்கியிருந்த லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, 1998இல் கொழும்பு நீதிமன்றத்தில் ஒரு அதிர்ச்சியூட்டும் வாக்குமூலம் அளித்தார்.

அவர், தான் குற்றம் செய்த இடத்தை மட்டுமல்லாமல், 1995 மற்றும் 1996ஆம் ஆண்டுகளில் யாழ்.குடாநாட்டில் காணாமலாக் கப்பட்ட சம்பவங்களின் பின்னணியில் அரச படைகள் தான் இருக்கின்றன என்பதையும் 300 முதல் 400 உடல்கள் செம்மணியில் புதைக்கப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இவரது வாக்குமூலத்தின் விளைவால் 1999 ஜூனில் செம்மணியில் அகழ்வாராய்ச்சிகள் தொடங்கப்பட்டன. இதன்போது மொத்தமாக 15 உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டன. இது சோமரத்ன ராஜபக்ஷவின் கூற்றுக்கு மாறாக காணப்பட்டது. அதனால் அகழ்வாராய்ச்சிக்குப் பிறகு, ஏழு இராணுவ வீரர்கள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட போதிலும், அவர்கள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால், அம்னஸ்டி இண்டர்நஷனல் வெளியிட்ட அறிக்கையில் சோமரத்ன ராஜபக்ஷ தனது வாக்குமூலத்தை வாபஸ் பெற வேண்டும் என்று அச்சுறுத்தப்பட்டு அவரது மனைவிக்கு மிரட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டதுடன் அவ்வாறு செய்யாவிட்டால், அவரது குடும்பத்தினர் கொல்லப்படுவார்கள் என்றும் அச்சுறுத்தப்பட்டனர் என்று குறிப்பிட்டுள்ளது.



மேலும், அவர் சிறையில் இருந்தபோது தனது வாக்குமூலத்தை மீளப்பெற மறுத்ததால், சிறைக் காவலர்களால் தாக்கப்பட்டதாகவும் குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சாட்சியத்தின் மீதான இத்தகைய நேரடி அச்சுறுத்தல்கள்,

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

**செம்மணி மனித... தொடர்ச்சி ...**

1999ஆம் ஆண்டு அகழ்வாராய்ச்சியின் போது அதிக உடல் கள் கண்டெடுக்கப்படாததற்கும், விசாரணைகள் திட்டமிட்டுத் தடுக்கப்பட்டதற்கும் காரணமாக இருப்பதோடு மட்டுமன்றி, படு கொலைகளில் அரச படைகளுக்கு பிரதான பங்குண்டு என்பதை யும் வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் தான் அதே சோமரத்ன ராஜபக்ஷ தனது மனைவி ஊடாக ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு எழுதிய கடிதத்தில் 'சர்வதேச விசாரணை நடைபெற்றால் வாக்குமூலம் அளிப்பதற்கு தயார்' என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் சிறையில் இருந்துகொண்டு 29 வருடங்களுக்குப் பின்னர் அவர் மீண்டும் சாட்சியமளிப்பதற்கு தயார் என்று அறிவித்திருப் பதானது அவரது பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளை வெகுவாக வெளிப்படுத்துகிறது.

அதுமட்டுமன்றி அவர் புலனாய்வு அதி காரிகளின் பெயர் விபரங்களை சுட்டிக்காட்டி யுள்ள நிலையில் அந்த சக்திகள் சோமரத்ன ராஜபக்ஷவின் குரலை சிறைக்குள்யே நசுக்கு வதற்கே முனையும் என்பதும் இயல்பான சந்தேகம்.

ஆகவே, சோமரத்ன ராஜபக்ஷ பாது காக்கப்பட வேண்டிய குற்றவாளி. ஏனென்றால் அவரின் வாக்குமூலம் தான் குடாநாட்டில் அரங்கேற்றப்பட்ட படுகொலைகளையும், மனித புதைகுழிகளையும் அதனுடன் தொடர்புடைய ஏனைய படை அதிகாரிகளையும் அம்பலப்படுத்தப் போகிறது.

இப்படியிருக்கையில், 1998 ஜூலை 22 அன்று, பாராளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம், செம்மணி புதைகுழிகள் குறித்து பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது, 'பல உடல்கள் ஒரு இடத்தில் நெருக்கமாக புதைக்கப் படும் போது, தனிப்பட்ட உடல்களைத் தோண்டு வதில் காட்டிலும் தொழில்நுட்ப சிக்கல்கள் அதிகமாக இருக்கும்' என்று எச்சரிக்கை விடுத்திருந் தார்.

இந்த எச்சரிக்கை நியாயமாக இருந்தாலும் மறுபக்கத்தில் மனிதப்புதைகுழியின் அகழ்வுப் பணிகளை வெகுவாக பாதிக்கவும் செய்திருந்தது. அதேநேரம், அவர் ஐ.நா.வின் பரிந்துரையின்படி, மூன்று கட்டங்களாக நிபுணத்துவ விசாரணைகள் நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.



நீலன் திருச்செல்வம் 27ஆண்டுகளுக்கு முன்னரே சர்வதேச தரத்திலான விசாரணை முறைகளை விரிவாக விவரித்திருந்தும், அவரது ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டன. அவர் நெருக்கமாகச் செயற்பட்ட சந்திரிகா தலைமையி லான அரசே புறக்கணிப்புக்கும் காரணமாக இருந்தது என்பது வரலாறு.

தற்போதும் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுகளின்போது தொழில்நுட்பக் கட்டமைப் புகள் இல்லை. அவற்றை உள்வாங்குவதற்கு அரசாங்கத்தின் கட்டமைப்புக்களுக்கு முழு மையான ஈடுபாடுகள் இல்லை. இதனால் தொழில்நுட்ப ரீதியான அணுகுமுறை முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. மண்ணை ஊடுருவும் ஒரு ஸ்கான் இயந்திரம் பாரிய மனிதப்புதைகுழி அகழ்வுக்கு போதுமானதல்ல.

சர்வதேச நீதிபதிகள் ஆணையகத்தின் அறிக்கையின்படி, இலங்கை உள்நாட்டுப் போரின் போது காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 60,000 முதல் 100,000 வரை இருக் கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த புள்ளிவிவரங்கள், கடந்தகால நீதி மறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலின்மை குறித்த தீவிரமான நிலை மையை எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையில் தடயவியல் கட்டமைப்பு களான மரபுரிமை பரிசோதனை வசதிகள், சிதைந்த எச்சங்களைப் பகுப்பாய்வு செய்யவதற்கான ஆய்வகங்கள் முறையாக காணப் படவில்லை. இதனால் சர்வதேச மேற்பார்வையும் ஆய்வுகளுக் கான ஒத்துழைப்பும் பங்கெடுப்பும் மிகவும் அவசியமானது என்று குறித்த ஆணையகம் வாதிடுவதில் தவறில்லை.

மேலும், ஜூன் மாதத்தில், ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்க்கர் டேர்க் செம்மணிப் பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டார். அவரது விஜயம், செம்மணி மனித புதைகுழி தொடர்பில் சர்வதேசத்தின் பார்வை கிடைத்துள்ளதை உறுதிப்படுத்துவதுடன், பல தசாப்தங்களாகத் தொடரும் பொறுப்புக் கூறலின்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற் கான இலங்கை அரசாங்கத்துக்கு காணப்படுகின்ற கடைசி வாய்ப்பு என்பதையும் ஆணித்தரமாக கூறுவதாக உள்ளது.

ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, தமிழர்களின் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தார். எனவே, செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் அவரது அரசாங் கத்துக்கு நீதியை நிலைநாட்டுவதில் உள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதற்கும், நிரூ பிப்பதற்குமான முக்கிய சந்தர்ப்பமொன்று கிட்டியுள்ளது.

செம்மணி புதைகுழி விடயத்தில் நம்ப கமான, நியாயமான தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் ஈடுபாட்டைக் கொண்டிருக்குமாக இருந்தால் சர்வதேச அனுபவங்களை ஆராய்வது அவசியமாகும்.



1995இல் செர்பிரெனிகா படுகொலைகள் நிகழ்ந்தபோது அங்கு, மனித உரிமைகளுக்கான மருத்துவர்கள் குழு, சர்வதேச தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் தடயவியல் நிபுணர் களுடன் இணைந்து அகழ்வாராய்ச்சிகளை மேற் கொண்டது. கைகள் கட்டப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட உடல்கள் போன்றவை தடயவியல் ஆதாரங்களாக மீட்கப்பட்டன.

அவை அப்படுகொலைகள் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டவை என்பதை நிரூபிக்கவும் போர்க்குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் உதவியிருந்தன.

அதேபோல், 1990களில் ருவாண்டாவில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை ஆணையகம் ஆய்வு செய்தபோது, ருவாண்டா அரசாங்கமே பல படுகொலைகளுக்கு நேரடியாகப் பொறுப்பு என்பதை உறுதி செய்ததோடு உள்நாட்டு கட்டமைப்புகள் போர்க் குற்றங்கள் குறித்த வழக்குகளை திறம்பட கையாள முடியாத நிலையில் இருந்தன என்பதையும் கண்டறிந்தது.

போண்மத் நெறிமுறை (Bournemouth Protocol) போன்ற வழிகாட்டுதல்கள், மனிதப் புதைகுழிகளைப் பாதுகாப்பதற்கும், சட்டபூர்வ மான, மனித உரிமைகளை அடியொற்றிய முறை யில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மான வழிகாட்டுதலை வழங்குகிறது.

அதுமட்டுமன்றி, படுகொலை செய்யப் பட்டு இறந்தவர்களின் கண்ணியத்தைப் பாது காப்பது, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பங் களிப்பை உறுதி செய்வது, மற்றும் தடயவியல் ஆதாரங்களின் சங்கிலித்தொடர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது போன்ற அம்சங்களை வலியு றுத்துகிறது.

செர்பிரெனிகா மற்றும் ருவாண்டா போன்ற உலகளாவிய உதாரணங்கள், சர்வ தேசத்தின் பங்கேற்பிற்கான கோரிக்கைகளை உள்நாட்டு அரசக் கட்டமைப்புக்களின் பல வீனத்தின் அடையாளமாக அல்ல, மாறாக நீதிக்கான அத்தியாவசிய தேவையாகவே உறுதிப் படுத்துகின்றன.

அந்தவகையில், செம்மணி மனிதப் புதைகுழிகள், பல தசாப்தங்களாக நீதி மறுக்கப் பட்டதன் கவலைக்குரிய அடையாளமாக இருப்பதோடு அண்மைக்காலத்தில் மீட்கப்பட்ட சான்றுப்பொருட்களும், எலும்புக் கூட்டுத் தொகு திகளும் நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான முக்கியமான வாய்ப்பை வழங்குகின்றன.

இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள, முதலில் பாதிக்கப்பட்டவர்கள் அவர் களை வழிநடத்துகின்ற சிவில் அமைப்பினர், மற்றும் அரசியல் தரப்பினர் ஏகோபித்த நிலைப் பாட்டுக்கு வரவேண்டும்.

தங்களுக்குள் காணப்படுகின்ற தனிப்பட்ட போட்டிகள், முரண்பாடுகளை மையப்படுத்தி செம்மணி மனிதப்புதைகுழி விடயத்தினை கையாள்பவர்கள் நாங்களே என்று மார்பு தட்டி சொந்தக் கொண்டாடுவதற்கு முனையக்கூடாது.

ஏனென்றால் செம்மணி மனிதப்புதைகுழி ஒருதனிப்பட்ட நிகழ்வு அல்ல அது தமிழ்சமூகத்தின் கூட்டு நினைவுக்களம். கட்டமைக்கப்பட்ட இனஅழிப்புக்கான வலுவான அடையாளம். அரசபடைகள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரம். ஆகவே, அனைத்து விடயங்களும் பாதிக்கப்பட்டவர்கள் பக்கத்திலிருந்து முறையாக கையாளப்பட வேண்டும்.

சட்டத்தின் ஊடாக அனைத்தையும் முன்னெடுக்க முடியும் என்ற கோதாவில் செயற்பட முனைவதும், சட்டத்தரணிகள் தான் இந்த விடயத்தினை கையாள வேண்டும் என வரையறுப்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அதிலும் குறித்தவொரு சட்டத்தரணிகள் தரப்பு புதைகுழிப் பகுதியை கையாள முனைவது முற்றிலும் தவறானது.

இதுவொரு பல்பங்குதாரர்களைக் கொண்ட விடயமாகும். அந்தப் புரிதல் முதலில் ஏற்பட வேண்டும். அந்த அடிப்படையில் பேதங் களுக்கு அப்பாலான கூட்டுத்திட்டங்களும், செயன் முறைகளும் அவசியமாகும்.

அகழ்வுகள் நடைபெறும் களத்தில் முழு நாளும் முகாமிட்டிருப்பது கட்டாய பணி என்பது போன்று தான் அரச கட்டமைப்புக்களுக்கு கூட்டாக அழுத்தமளிப்பது, தொழில்நுட்ப உதவி களை பெறுவதற்கான அணுகலைச் செய்வது, இராஜதந்திர மட்டங்கள் ஊடாக சர்வதேச அணுகலை செய்வது, சோமரத்ன போன்ற சாட்சிகளை பாதுகாப்பது, ஏனைய பகுதிகளை அடையாளம் காண்பிப்பதற்கான நடவடிக்கை களை முன்னெடுப்பது உள்ளிட்ட பல பணிகள் உள்ளன. அவை முறையான திட்டமிடல்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

நீதியை நிலைநாட்டுவது என்பது ஒரு சில தனிநபர்களுக்கு தண்டனை வழங்குவது மட்டுமல்ல, கடந்தகாலத்தின் வடுக்களை சரி செய்வது, பாதிக்கப்பட்டோரின் கண்ணியத்தை மீட்டெடுப்பது, மற்றும் மீண்டும் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காது என்பதை உறுதிப்படுத்துவது உள்ளிட்ட நிலைமாறுகால நீதியின் கூறுகளை முழுமையாக அமுலாக்குவதாக இருக்க வேண்டும்.

• • •

கட்டுரை

# மட்டக்களப்பு மாவட்டமும் ! மாகாணசபை தேர்தலும்!

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மாகாணசபை தேர்தலை விரைவில் நடத்துவோம் எனகூறியிருந்தார். ஆனால் பாராளுமன்ற தேர்தலில் 159 பெரும்பான்மை ஆசனங்களை பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசானது, மாகாணசபை தேர்தலை இழுத்தடித்து காலம் கடத்தும் போக்கையே காட்டி வருகிறது.



மாகாணசபைகளுக்கு முழுமையாக அதிகாரங்களை பகிர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார். இதேபோல், மாகாணசபை தேர்தல் தொடர்பாக சர்வகட்சி மாநாட்டை நடத்துமாறும், இலங்கை பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் பிரேம் நாத் தொலவத்த கூறியுள்ளார்.

இவ்வாறு, இரண்டு பிரதான சிங்களக் கட்சிகள் தற்போது இதனை தெரிவிக்கும் நிலையில், வடகிழக்கை மையப்படுத்தும் தமிழ் கட்சிகளும் மாகாணசபை தேர்தலை நடத்துமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசின் செல்வாக்கு, பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் சரிவு நிலைக்குச் சென்றுள்ளது. இது கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் தெரிந்தது.

மாகாணசபை முறைமை, வடகிழக்கு இனப்பிரச்சனைக்காகவே இலங்கை–இந்தியா ஒப்பந்தம் மூலம் 1987ல் கொண்டுவரப்பட்டு, இணைந்த வடகிழக்கு தேர்தல் 1988ல் நடைபெற்றது. ஓராண்டுக்குள் அது சிதைந்து போனது.

இணைந்த வடகிழக்கை சட்டம் மூலம் 2006ல் ஜே.வி.பி. கட்சியால் பிரித்த பிறகு, கிழக்கில் 2008 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் மட்டும் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்பட்டன. வடமாகாணசபையில் 2013ல் மட்டும் ஒரேயொரு மாகாணசபை தேர்தல் இடம்பெற்றது.

மாகாணசபை அதிகாரங்கள் தற்போது ஆளுநரிடம் இருப்பதால், வடகிழக்கில் மக்கள் திருப்தியற்ற ஆட்சியே நிலவுகிறது.



மாகாணசபை தேர்தல் இழுத்தடிப்புக்கு காரணம் 2015ல் நல்லாட்சி அரசாக இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன் ஆகியோரே. 2015 முதல் 2019 வரை எல்லை நிர்ணய ஆணைக்குழு ஒன்றை நிறுவி, தேர்தலை பிற்போட்டதால், இப்போது சட்ட சிக்கலை காரணம் காட்டி தேர்தலை தாமதப்படுத்த தேசிய மக்கள் சக்தி அரசுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

நல்லாட்சியில் எதிர்க்கட்சியாக இருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், மாகாணசபை சட்டத்திருத்தத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்கும் போது எதிர்க்கவில்லை. இதற்குக் காரணம், மாகாணசபை தேர்தலை விடவும் புதிய அரசியலமைப்பில் முழு நம்பிக்கையை வைத்திருந்ததால், மாகாணசபை சட்டத்திருத்தத்தில் அக்கறை காட்டவில்லை.



தற்போது மாகாணசபை தேர்தலை பழைய முறையில் நடத்த, பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கினால் போதும். நல்லாட்சி காலத்தில் மாகாணசபை திருத்தச் சட்டத்திற்கு மௌனமாக இருந்துவிட்டு, 2020க்கு பிறகு, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், தனிநபர் பிரேரணையாக பழைய முறையில் தேர்தல் நடத்தும் முன்மொழிவை சமர்ப்பித்தபோதும், அது இதுவரை பரிசீலிக்கப்படவில்லை.

தற்போது தேர்தல் நடத்த இரண்டு வழிகள் உள்ளன:

1. பழைய முறையில் தேர்தல் நடத்துவது.
2. திருத்தங்களுடன் ஆணைக்குழு அறிக்கையை பிரதமர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவது.

இந்த இரண்டில் ஒன்றை செய்யாமல் தேர்தல் நடைபெற வாய்ப்பு இல்லை.



2024 மதிப்பீட்டின்படி, கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை 1,782,050 ஆகும். இது இலங்கையின் மொத்த சனத்தொகையில் 8.2% ஆகும். திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழர் மூன்றாம் இடத்தில் உள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே தமிழர் முன்னணியில் இருந்தாலும், 2012 புள்ளிவிபரத்துடன் ஒப்பிடும் போது குறைவடைந்துள்ளது. ஆனால் 2024 இல் இன ரீதியான கணிப்பீடு வெளியாகவில்லை. இது

பா. அரியநேத்திரன்

வெளியாகும்போது நிலைமை புரியும்.

கிழக்கு மாகாணசபை தேர்தல் இடம் பெற்றால், எந்தக் கட்சியும் அல்லது இனமும் தனியாக ஆட்சி அமைக்க முடியாத நிலையே இருக்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 346 கிராமசேவகர் பிரிவுகளில், 49 முஸ்லீம் பெரும்பான்மையுடையவை. மீதமுள்ள 297 தமிழ் பெரும்பான்மையுடையவை. விகிதாசாரம் 6:1. 965 கிராமங்களில் சுமார் 65 முஸ்லீம் கிராமங்களாகவும், 900 தமிழ் கிராமங்களாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சில கிராமங்களில் சிங்களரும் வாழ்கின்றனர் (விகிதாசாரம் 15:1).

இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான விடயம் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலப்பயன்பாடு மாவட்டத்தின் மொத்த 2,854 சதுரகிலோமீட்டர் நிலப்பரப்பில் காட்டுவள நிலங்கள் 40 வீதம். விவசாயநிலங்கள் 37 வீதம். ஆக, 75 வீதத்திற்கும் அதிகமான நிலங்கள் இந்த இரண்டு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்ற நிலையில் எஞ்சி இருப்பது 25 வீதத்திற்கும் குறைவான நிலப்பரப்பு மட்டுமே.

இந்த 25 வீதத்தில் பயன்பாடின்றி அல்லது பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற தரிசு நிலங்களாக உள்ள நிலப்பரப்பு 6 வீதம். நீர்நிலைகள் 5 வீதம், சதுப்பு நிலங்கள் 2 வீதம், வீட்டு வசதி, வீட்டு தோட்டங்களுக்கான நிலம் 5 வீதம்.

ஆக, இன்னும் விவசாயம் செய்யக்கூடிய, பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாத நிலப்பரப்பு 5 வீதம் மட்டுமே உள்ளது. மேலும் விவசாய நிலங்கள் 37 வீதம் தனியாருக்கு சொந்தமானவை என்பதும், 40 வீதமான வனபரிபாலன, வனவிலங்கு புகலிட பாதுகாப்பு நிலங்கள் அரச நிலங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மாவட்டம் கொண்டுள்ள 120 கிலோமீட்டர் நீளமான கடற்கரையானது, கடற்கரையோர, சுற்றாடல் பாதுகாப்பு, உல்லாசப் பிரயாணத்துறை விருத்திக்கானதாகும்.



உள்நாட்டு நீர்நிலைகளைப் பொறுத்தமட்டில் குளங்கள், வாவிகள், ஆறுகள், தோணாக்கள்.... என்று 342 நீர்நிலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் 342 உள்நாட்டு நீர்நிலைகள் உள்ளன. இதில் பத்துக்கும் குறைவானவை முஸ்லீம் பகுதிகளில்; மீதமுள்ள 330க்கும் மேற்பட்டவை தமிழ் விவசாயப்பகுதிகளில். இவை விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பில் பயன்படுகின்றன. பட்டிருப்பு தொகுதியும், மட்டக்களப்பு மேற்குக் கரை பெரும்பாலான நிலப்பரப்பும் (99%) வரலாற்று காலம் முதல் தமிழர் வாழ்விடங்களே. எழுவான்கரையில் சில முஸ்லீம் மற்றும் தமிழ் பகுதிகள் இணைந்து நிர்வகிக்கப்பட்டன. 1961ல்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

ஆய்வு அறிக்கை

# சம்பூர் மனிதப் புதைக்குழி விவகாரம் இன்று வரையான விரிவான பார்வை.

பிரதீவன்
மனித உரிமைச் செயற்பாட்டாளர்

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் பூதாகரமான நிலையைக் கொண்டிருந்த வேளையில், அதன் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 21.07.2025 அன்று ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், அதற்கு முன்தினம் (20.07.2025) திருகோணமலை சம்பூர் பகுதியில் மனிதப் புதை குழி என சந்தேகிக்கப்படும் இன்னொரு இடம் கண்டுபிடிக்கப்பட்டது.

திருகோணமலை, சம்பூர் 5ஆம் பிரிவில் கடற்கரையோரப் பகுதியில் நிலத்தடியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மனித மண்டையோடு உட்பட சில மனித எலும்புத் துண்டுகள் மற்றும் எச்சங்கள் வெளிப்பட்டன. இதையடுத்து, குறித்த கண்ணி வெடி அகற்றும் பணி இடைநிறுத்தப்பட்டது.

இது, இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் கொடூரமான காலப்பகுதியையும், குறிப்பாக வடக்குக் கிழக்கில் நடந்த மனிதப் பேரவலங்களையும்-படுகொலைகளையும் — மீண்டும் மக்களின் நினைவில் எழுப்பியதோடு, அதற்கு நீதி கிடைக்குமா என்ற ஏக்கத்தையும் தூண்டியது.



இந்நிலையில் இந்த எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்ட இடத்தில் கடந்த 2025.07.17 அன்று மூதூர் - சம்பூர் கடற்கரையோரப் பகுதியில் நிலக் கீழ் கண்ணிவெடி அகழும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. இது சம்பூர் சிறுவர் பூங்காவின் முன்பாகவுள்ள கடற்கரையோரப் பகுதியிலுள்ள மீனவர் சங்கக் கட்டடத்திற்கருகில், (MAG) எனப் படும் கண்ணிவெடி அகழும் நிறுவனம், தங்களுக் குரிய தளபாடங்கள் மற்றும் பொருட்களுடன் முகாமிட்டு, கண்ணிவெடி அகழும் பணியைத் தொடர்ந்தது.

இதன்போது 2025.07.20 ஞாயிறு குறித்த பகுதியில் மனித மண்டையோடு உள்ளிட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, அகழ்வுப் பணி உடனடியாக நிறுத்தப்பட்டு பொலீசாருக்கு அறிவிக்கப்பட்டு அது நீதிபதிக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மூதூர் நீதிமன்ற பதில் நீதிபதி எம். எம்.நஸ்லீம் குறித்த இடத்தை பார்வையிட்டதோடு குறித்த பணியை 2025.07. 23ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு உத்தர விட்டிருந்ததோடு குறித்த பகுதியை நீதிபதியின் முன்னிலையில் அரச பகுப்பாய்வு திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக் களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங் கள் பணியகம் ஆகிய திணைக்களங்களின் பிரசன் னத்துடன் (2025.07.23) புதன்கிழமை அகழ்வதற்கும் உத்தரவிடப்பட்டிருந்ததுடன் பொலிஸாரைக் குறித்த பகுதியில் பாதுகாப்புக் கடமைகளுக்காக ஈடுபடுத்துமாறும் பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

குறித்த அகழ்வுப் பணியின்போது சிதை வடைந்த மனித தலைப்பகுதி மற்றும் கால்களின் எலும்புப்பகுதிகளே கண்டெடுக்கப்பட்டிருந்தன. குறித்த பகுதியை அண்மித்த பகுதியிலிருந்து மிகக் குறுகிய தூரத்தில் சுமார் 25 மீட்டர் தூரத்தில் சம்பூர் படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்ட தூபியும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கில் இராணுவமும், முஸ்லீம் ஊர் காவல் படைகளும் இணைந்து அரசின் திட்ட மிடலுடன் நடத்தப்பட்ட படுகொலைக ளாகக் கருதப்படுகின்ற அம்பாறை மாவட்டத்தின் உடு ம்பன்குளம்,திராய்க்கேணி,வீரமுனை உள்ளிட்ட இன்னும் பல படுகொலைகளும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை,மகிழடித்தீவு, சத்துருக்கொண்டான்,சித்தாண்டிப் படுகொலைகள் போன்ற மிகக் கொடிய படுகொலை நடந்த இடமே இந்த சம்பூர்ப் படுகொலையாகும்.

திருகோணமலை சம்பூர் பகுதி, இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது பல மனித உரிமை மீறல்களுக்கும், பொதுமக்கள் படுகொலைகளாகக் சாட்சியாக இருந்துள்ளது. குறிப்பாக, சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் 1990 07.07 ஆம் திகதி இப்பகுதியில் நடந்த ஒரு கோரமான சம்பவத்தில், அப்பாவிப் பொதுமக்கள் பெருமளவில் இராணு வம் மற்றும் முஸ்லீம் ஊர்காவல் படையினர்களால் படுகொலை செய் யப்பட்டனர்.

சம்பூர் கிராமத்தில் வெட்டியும் சுட்டும் 57 பேர் கொல்லப்பட்டதாகப் பதிவாகியுள்ளது. இந்தச் சம்பவங்களின் பின்னர் அப்பகுதி மக்கள் இடம்பெயரச் செய்யப்பட்டு அவர்க ளின் சொத்துகளும்,காணிகளும் கூட சூறை யாடப்பட்டன, இப்பிரதேசம் புலிகளின் நடமா ட்டமுள்ள பகுதி எனக் கருதப்பட்டதாலும் இங்கிருந்து திருகோணமலை துறைமுகம் தாக்கப் படலாம் எனும் அச்சத்தாலும் இங்கிருந்து பொதுமக்கள் இடம்பெயரச் செய்யப்பட்டதோடு அவர்களின் வீடுகளும் இடித்தகற்றப்பட்டதும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இவ்வாறான பெரும் துன்பங்களை அனுபவித்த அந்த மக்களின் உயிரிழந்த உறவுகளின் உடல்கள் மீட்கப்படாமலும், முறையாக அடையாளம் காணப்படாமலும்,உரிய முறையில் அல்லாமலும் புதைக்கப்பட்டும் இருந்தது.



இந்தப் படுகொலைகளின் நினைவாகவே சம்பூர் கடற்கரையோரத்தில் சிறுவர் பூங்கா அமைப்பின் போது நினைவுத் தூபியொன்றும் அமைக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் அந்த மக்களால் அங்கு அஞ்சலிகள் செய்யப்படுவதோடு நீதிக்கான குரல் தொடர்ந்தும் ஒலித்து வந்தது.

இந்நிலையில் தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ள மனித எச்சங்கள் அந்தப் பகுதி மக்களின் நீதி மற்றும் உண்மைக்கான தேடலுக்கு மேலும் நல்ல நம்பிக்கையும் வலுவும் சேர்த்துள்ளது என்றாலும் பல கேள்விகளையும் எழுப்பியிருந்தாலும் அகழ்வுப் பணிகள் ஆரம் பித்தன.

குறித்த பகுதிக்கு 2025.07.23 புதன்கிழமை அன்று கள ஆய்வை மேற்கொண்டிருந்த நீதிபதி குறித்த இடத்தை பார்வையிட்டதுடன் அங்கு வருகை தந்திருந்த திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடியதோடு சட்ட வைத்திய அதிகாரிக்கு இப்பகுதியில் அகழ்வுப்பணியை முன்னெடுப்பது தொடர்பில் மிதிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனத்துடன் கலந்துரையாடி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தியதோடு,தொல்லியல் திணைக்களத்தி டம் குறித்த இடத்தில் மயானம் இருந்ததா என்பது தொடர்பில் ஆராய்ந்து உரிய அறிக்கையினை சமர்ப்பிக்குமாறும், குறித்த அறிக்கைகளை 2025.07.30 ம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் மூதூர் நீதிமன்ற நீதிபதி திருமதி. எச்.எம். தஸ்னீம் பௌசான் உத்தரவிட்டிருந்தார்.

அதன்பின்னர் குறித்த இடத்திற்கு அரச பகுப்பாய்வுத் திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக்களம், புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம், காணாமல் போனோர் அலுவலகம், குற்றவியல் தடய காட்சிகள் அலுவலகம் (SOCO) ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் வருகை தந்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டிருந்தனர்.



உரிய திணைக்களங்களின் அதிகாரிகள் பிரசன்னமாகியிருந்த நிலையில் அப்பகுதியானது தொடர்ந்தும் பொலிஸாரின் பாதுகாப்பின்கீழ் கண்காணிக்கப்பட்டு அகழப்பட்ட போதும் மீண்டும் சில மனித எச்சங்கள் வெளிவந்திருந்தது. அதேவேளை குறித்த குதிக்குள் குறித்த திணைக் களம் சார்ந்தவர்கள் தவிர்ந்த எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை, ஊடகவியலாளர்களும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பதோடு எதிர்வரும் 30ஆம் திகதி கிடைக்கப்பெறுகின்ற சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்லியல் திணைக்கள அறிக்கைகளை ஆராய்ந்த பின்னர்தான் அடுத்தகட்ட நடவடிக்கைகள்முன்னெடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

மீண்டும் மனித எச்சங்கள் கண்டெடுக்கப் பட்ட பகுதியை கிழக்கு மாகாண பாதுகாப்பு கட்டளைத் தளபதியின் அனுமதியுடன் படையின ரின் பொறியியல் பிரிவு உத்தியோகத்தர்களின் ஊடாக அகழ்வதற்கான கட்டளையை நீதிமன்றம் இன்று 06.08.2025 ல் பிறப்பித்துள்ள நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி குறித்த வழக்கை மீள அழைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப் பிடத்தக்கதாகும்.

இப் பகுதியில் அகழ்வுப் பணியை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்வதற்கான சட்டமாநாடு 06.08.2025 மதியம் மூதூர் நீதிமன்றில் நீதிபதி திருமதி எச்.எம்.தஸ்னீம் பௌசான் முன்னிலையில் இடம்பெற்றிருந்தது.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அரச பகுப்பாய்வுத் திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, குற்றவியல் தடய காட்சிகள் அலுவலகம் (SOCO) தொல்பொருள் திணைக்களம், காணாமல் போனோர் அலுவலகம், கண்ணிவெடி அகற்றல் உத்தியோகத்தர்கள்,MAG எனும் மிதிவெடி அகற்றும் நிறுவன உத்தியோகத்தர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபை, பிரதேச செயலாளர், பிரதேச சபை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தமிழர் தாயகத்தில் உரிமைகளை பெற தொடரும் போராட்டங்களுக்கு தீர்வு கிடைக்குமா??



தமிழர் தாயகமான வடகிழக்கில், ஈழ மக்களின் உரிமைகளைப் பெற பல போராட்டங்கள் தற்போதைய அநுர அரசாங்கத்திலும் நடைபெற்று வருகின்றன.



குறிப்பாக, வடகிழக்கில் பல உரிமைகளுக்கான போராட்டங்களை தமிழ் பேசும் மக்கள் முன்னெடுத்து வருகின்றனர். எடுத்துக்காட்டாக, காணாமல் போன உறவுகளுக்கான தீர்வு, நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம், பயங்கரவாத தடைக் சட்டத்தை நீக்க வேண்டும் என பலவகையான உரிமைப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

“இலங்கையின் இணைந்த வடகிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத, சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வே அவசியம்” என்ற தொனிப்பொருளில் 100 நாள் செயல் முனைவொன்றை வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினர் கடந்த மூன்று ஆண்டுகளாக இவ்வாண்டும் ஆரம்பித்துள்ளனர்.

இதனடிப்படையில், மாறி மாறி ஆட்சிக்கு வரும் பெரும்பான்மை அரசாங்கம், அரசியல் தீர்வு பற்றி தமிழர்களுக்கு பல உறுதிமொழிகளை வழங்கினாலும், பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும், எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அவ்வப்போது ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் காலங்களிலும் சிறுபான்மை கட்சித் தலைவர்களை அழைத்து, பெரும்பான்மை கட்சித் தலைவர்கள் அரசியல் தீர்வு பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும், தீர்வு எட்டப்படாமல் உள்ளது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை விஜயம் குறித்து வடகிழக்கு மக்கள் அதிருப்தி வெளியிட்டு, தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் பேசப்பட்டாலும், நிலையான தீர்வு எட்டப்பட வில்லை. ஆனாலும், வலிந்து கடத்தப்பட்டு காணாமல் போன உறவுகள், சர்வதேச நீதி பொறிமுறையை வலியுறுத்தி போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

செம்மணி மனித புதைகுழி விவகாரம் தொடக்கம், மனித உரிமைகள் விடயங்களில் அரசு கரிசனையின்றி செயல்படுவதாக காணாமல் போன உறவுகளின் சங்கம் தெரிவிக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் வடகிழக்கு விஜயத்திற்குப் பின், வடகிழக்கு சிவில் சமூகங்களின் கடிதங்களுக்கு பதிலளித்துள்ளார்.

“பொறுப்புக்கூறலில் அரசாங்கம் தவறிவிட்டது” என்றும், மனித உரிமைகள் பேரவையின் 60வது அமர்வில் அவர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கைக்கு முன்னோட்டமாக, ஜூலை 14 மற்றும் ஆகஸ்ட் 4, 2025 தேதிகளில் அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு பதில் அளித்ததாகவும் குறிப்பிட்டார்.



இராணுவம் ஆக்கிரமித்த நிலங்களை விடுவிக்கவும், புதிய நில அபகரிப்புகளை நிறுத்தவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகதடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்கவும், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தலை நிறுத்தவும் உடனடி நடவடிக்கை தேவை என டர்க் வலியுறுத்தினார்.

பாதிக்கப்பட்ட சமூகங்களுடனான நம்பிக்கையை கட்டியெழுப்ப, அவர்களுக்கு ஆதரவான நினைவுகூரல் அவசியம் என்றும் தெரிவித்தார்.

சமீபத்தில் செம்மணி புதைகுழிக்கு விஜயம் செய்ததை சுட்டிக்காட்டிய அவர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் முழுமையான, சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனக் கோரினார். சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்க, நம்பகமான பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை உருவாக்குவதில் தொடர்ச்சியான அரசாங்கங்கள் தவறிவிட்டதாகவும் குறிப்பிட்டார்.



## கின்னியான்

தமிழ் பிரதிநிதிகள் எழுப்பிய கவலைகள் தனது அறிக்கையில் பிரதிபலிக்கும் என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதில் ஐ.நா. தொடர்ந்து ஒத்துழைக்கும் என்றும் உறுதி அளித்தார்.

இந்நேரத்தில், காணாமல் போன சமூகத்தினர் தொடர்ந்த கண்ணீருடன், உறவுகளைத் தேடி வீதி போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பல தாய்மார்கள் உறவுகளைத் தேடி அலைந்து, உயிரை



மாய்த்துள்ளனர்.

யுத்தத்துக்குப் பிறகு, அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்து அக்கறை காட்டவில்லை என்பதும் இதனால் வெளிப்படுகிறது.

தற்போதைய அரசாங்கம் புதிய தலைமையுடன் ஆட்சி பீடமேறி, இன-மத பேதமற்ற அரசியல் முறை எனக் கூறி வந்தாலும், அரசியல் தீர்வு குறித்து மௌனம் காத்துக் கொண்டிருக்கிறது. தமிழர் தாயகங்களில் நில ஆக்கிரமிப்பு, தொல்லியல் திணைக்கள ஆக்கிரமிப்பு, பௌத்த மயமாக்கம், இனவாத அரசியல் சிந்தனை ஆகியவை தொடர்ந்தவண்ணமே உள்ளன.

திருகோணமலையைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர் அமுதன் கூறுகையில்:

“தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வே தேவை. போராடினாலும் எங்கள் உரிமைகள் மீளப்பெற முடியாத நில அபகரிப்பும், பௌத்தமயமாக்கமும் தொடர்கிறது. சம்பூரில் மனித புதைகுழி இருப்பதாகக் கூறப்படுகிறது. இது எங்கள் உறவுகளாக இருக்கக் கூடும் என்ற சந்தேகம் உள்ளது. எனவே, எங்களுக்கு நிலையான தீர்வை ஆளும் அரசாங்கம் பெற்றுத் தர வேண்டும்” என்றார்.

கிழக்கு மாகாணத்தில் பல மனித கூட்டு படுகொலைகள் நடைபெற்றுள்ளன. இதனை நினைவுகூறும் நிகழ்ச்சிகள் மட்டுமே நடைபெறுகின்றன; நீதியை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

ஆய்வு அறிக்கை

# கிழக்கில் தமிழ்மக்கள் மீது ஜிகாத் மேற்கொண்ட இனப்படுகொலை



ஜெகதாஸ் அடிகளார்

1990 செப்டம்பர் 9ஆம் திகதி மமட்டக்களப்பு சத்துருகொண்டானில் மிகப்பெரிய இனப் படுகொலை நடைபெற்றது. சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி,பனிச்சையடி, கொக்குவில் கிரா மங்களை சேர்ந்த 198 பொதுமக்கள் அன்று மாலை சத்துருக்கொண்டானில் இருந்த இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டதாக காயங்களுடன் தப்பி வந்த சிவகுமார் என்ற இளைஞர் ஜனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளித்திருந்தார்.




கொல்லப்பட்டவர்களில்மூன்று குழந்தைக ளும் அடங்கியிருந்தன. எட்டு மாத குழந்தை விஜயகுமார், 3மாத குழந்தைகளான பிரியா, வேணுதாஸ் ஆகியோரையும் இராணுவத்தினரும் முஸ்லீம் ஊர்காவல்படையினரும் இரண்டு துண்டுகளாக வெட்டி எரியும் நெருப்பில் போட்டனர் என இச்சம்பவத்தை நேரில் கண்டவர் தெரிவித்திருந்தார். இச்சம்பவத்தில், 8வயதுக்கு உட்பட்ட 68 சிறுவர்கள் படு கொலை செய்யப்பட்டிருந்தனர். கொல்லப்பட் டவர்களில் 80க்கு மேற்பட்டவர்கள் பெண்கள்.

இவர்கள் மிகக்கொடுமையாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட் டதாக கூறப்படுகிறது.

25வயதுடைய ஜீவமலர் என்ற பெண்ணின் கையில் இருந்த மூன்று மாத குழந்தை பிரியாவை பறித்தெடுத்து வெட்டி வீசிய படையினர் அப் பெண்ணை இழுத்து சென்று பாலியல் பலாத்காரம் செய்த பின் வெட்டி கொன்றனர்.

இந்த படுகொலையில் இராணுவத்துடன் முஸ்லீம் ஊர்காவல்படையும் இனப்படுகொலை புரிந்தனர் என்பது பின்னர் தெரியவந்தது. காயங்களுடன் தப்பி சென்ற சிவகுமார் என்ற இளைஞரை இராணுவம் தேடிய போது மட் டக்களப்பு மக்கள் குழுவும் ஆயர் இல்லமும் அவரை மறைத்து வைத்து வைத்தியம் செய்து காப்பாற்றியிருந்தனர். இதன் பின்னர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் அவர் இந்த படுகொலைகள் பற்றி சாட்சியமளித்திருந்தார்.இந்த கொலையை விசாரிப்பதற்கு என ஓய்வு பெற்ற நீதியரசர் பாலகிட்ணர் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவில் பெறப்பட்ட சாட்சியங்கள் விசாரணைகள் அடிப்படையில் அக்காலத்திற்கு இராணுவத்திற்கு மட்டக்களப்பில் பொறுப்பாக இருந்த கப்டன் பாசூரிய, கப்டன் ஹெரத் விஜயநாயக்க கேணல் பேர்சி பெனா ன்டோ ஆகியோர் இக்கொலையுடன் தொடர்பு பட்டிருக்கிறார்கள் இவர்களை விசாரித்து தண்டனை வழங்க வேண்டும் என நீதியரசர் பாலகிட்ணர் பரிந்துரை செய்திருந்தார்

பலபேருக்கு இந்த வரலாறு தெரிய வாய்ப் பில்லை பொறுமையாக வாசித்துப் பாருங்கள் (நினைவூட்டல்)

“ஜிகாத்’ முஸ்லிம் ஊர்காவல் படையினர், சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து அப்பாவி தமிழ் மக்களை படுகொலை செய்ய ஆரம்பித்த மறவா வடுக்கள்.




திராய்க்கேணி படுகொலைகள். 1990 ஆம் ஆண்டு ஆகஸ்டு 6 ஆம் திகதி இலங்கையின் அம் பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி என்னும் தமிழ்க் கிராமம் ஒன்றில் இடம்பெற்ற படுகொலை சிறப்பு அதிரடிப் படையினரின் ( STF) உதவியுடன் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் 47 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

திராய்க்கேணி கிராமம் மட்டக்களப்பு நகரில் இருந்து தெற்கே 70 கிமீ தொலைவில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளது. STF உதவியுடன் திராய்க்கேணி கிராமத்தினுள் நுழைந்த முஸ்லிம் ஊர்க்காவல் படை அங்குள்ள கோயிலில் தஞ்சமடைந்திருந்த 47 தமிழர்களைப் படுகொலை செய்தனர். வீடுகளினுள் வைத்து முதியவர்கள் பலர் உயிருடன் தீவைத்துக் கொளுத்தப்பட்டனர். 350 வீடுகள் முஸ்லிம் ஊர்க்காவல் படையால் தீக்கிரையாக்கப்பட்டன.

சரோஜா என்ற 13 வயதுச் சிறுமி ஒருத்தி கடத்தப்பட்டு பாலியல் வன்முறைக்குள்ளாக் கப்பட்டு படுகொலை செய்யப்பட்டாள். காலை ஏழு மணிக்கு ஆரம்பமான இப்படுகொலைச் சம்பவம் மதியம் வரை நீடித்திருந்தது.இப்படு கொலைகளை அடுத்து அக்கிராமத்தில் இருந்து வெளியேறிய மக்கள் காரைதீவு அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு 4 ஆண்டுகளுக்குப் பின்னரே ஊர் திரும்பினர்.

இப்படுகொலைகள் குறித்து முழுமையான விசாரணைகள் வேண்டும் எனக் குரல் கொடுத்த திராய்க்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஈ. மயிலைப்போடி என்பவர் 1997 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்டார்.

2003 அக்டோபர் 12 ஆம் நாள் திராய்க்கேணி பெரியதம்பிரான் கோயில் பகுதியில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் அங்குள்ள குழி ஒன்றில் மனித எலும்புக்கூடுகள் பலவற்றைக் கண்டுபிடித்தனர். இவை திராய்க்கேணிப் படுகொலைகளில் கொல்லப்பட்டவர்களின் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என உள்ளூர் மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணை கள் எதுவும் இடம்பெறவில்லை.



1990 செப்டம்பர் 9ஆம் திகதி மட்டக்களப் பில்மிகப்பெரியஇனப்படுகொலைநடைபெற்றது. சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, திராய்மடு கிராமங்களை சேர்ந்த 198 பொதுமக்கள் அன்று மாலை சத்துருக்கொண்டானில் இருந்த இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டதாக காயங்களுடன் தப்பி வந்த சிவகுமார் என்ற இளைஞர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சிய மளித்திருந்தார்.

இதுபோன்றுகிழக்கில்பலபடுகொலைகள் நடந்தன. சம்மாந்துறை படுகொலை, சித்தாண்டி படுகொலை, பொத்துவில் படுகொலை, கல்முனை படுகொலை, துறைநீலாவணை படுகொலை, ஏறாவூர்வைத்தியசாலைபடுகொலை, கோராவெளி ஈச்சையடித்தீவு படுகொலை, ஏறாவூர் படுகொலை, நற்பிட்டிமுனை படுகொலை, புதுக்குடியிருப்பு

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# செம்மணிப் புதைகுழி அகழ்வுகளின் போது சர்வதேச மேற்பார்வை அவசியம்



**தற்போது முக்கியமாகப் பேசப்படும் விவகாரம் செம்மணி புதைகுழி பற்றியதாகும். 600க்கும் மேற்பட்ட அப்பாவி ஈழத் தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டு, செம்மணியில் புதைக்கப்பட்டனர். கிருஷாந்தியின் வழக்குக்குப் பிறகு, இந்த செம்மணி விவகாரம் உலகுக்கு வெளிச்சத்திற்கு வந்தது. 1998ஆம் ஆண்டில் இது வெளியானது. பின்னர் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் அவை நிறுத்தப்பட்டன. இந்த செம்மணியில் பல நிகழ்வுகள் நடந்துள்ளன. தற்போது ஈழத்தில் தமிழர்களுக்கு நடந்த இன அழிப்பை சரியான முறையில் உலகுக்கு எடுத்துச் சொல்ல தமிழ் அரசியல்வாதிகள் மௌனம் சாதிக்கும் நேரத்தில், நாங்கள் இங்கு பேசுகிறோம். அந்த மண்ணுக்குள் புதைக்கப்பட்ட எலும்புகூடுகள் வெளிவந்து, "நாங்கள் ஆதாரமாக நிற்கிறோம், நீங்கள் பேசுங்கள்" என்று சொல்கின்றன.**

**கடந்த ஜூலை 27ஆம் தேதி, சர்வதேச சட்ட வல்லுநர்கள் குழு (ஐசிஜே) இலங்கை அரசுக்கு சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அவற்றில் செம்மணி புதைகுழியை சர்வதேச தரநிலையில் மேற்பார்வையிட்டு, மேலும் அகழ்வுகள் செய்யப்பட வேண்டும் என்பதும் அடங்கும். இந்த விவகாரம் பற்றி, நீண்டகாலமாக ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளுக்காக பாடுபட்டுவரும் சட்ட வல்லுநரும் அரசியல் ஆய்வாளருமான காதர் மாஸ்டர் அவர்களுடன் பேசுகிறோம்.**

**நேர்காணலாளர்:**

**நீங்கள் ஐசிஜேயின் அறிக்கையைப் பார்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அதைப் பற்றி உங்கள் கருத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

**காதர் மாஸ்டர்:**

*அந்த அறிக்கையைப் பற்றி பேசுவதற்கு முன், செம்மணி புதைகுழியைப் பற்றி சில தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறேன். கடந்த பிப்ரவரியில், இந்த புதைகுழி மீண்டும் திறக்கப்பட்டது. இது ஒரு தற்செயல் நிகழ்வாக இருந்தது. தமிழ் தலைவர்களோ, சிங்கள அரசோ இதைப் பற்றி அக்கறை காட்டாத நேரத்தில், ஒரு கட்டடப் பணியின் போது எலும்புகூடுகள் வெளியே வந்தன. அந்த இடத்தில் கற்களைத் தோண்டுவதற்குப் பதிலாக, எலும்புகூடுகளைத் தோண்ட வேண்டியதாயிற்று.*

*இந்த நிகழ்வு செம்மணியின் வரலாற்றில் மிகவும் உணர்ச்சிகரமான ஒரு அத்தியாயம். இதைக் கேள்விப்பட்ட உறவினர்களும், இனப்படுகொலையில் பலியானவர்களின் குடும்பத்தினரும் அங்கு வந்தனர். தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையில் அகழ்வு பணி தொடங்கியது. வழக்கறிஞர் ராஜித் ரனிதா ஞானராஜ் இதற்கு தலைமை தாங்கினார்.*

*முதல் அகழ்வில், நீல நிற பள்ளிப் பையும், அதில் யுனெஸ்கோ என்று அடிக்கப்பட்ட ஒரு பொம்மையும் கண்டெடுக்கப்பட்டது. அந்தச் சிறிய குழந்தையின் எலும்புக்கூடு அனைவரையும் உணர்ச்சிவசப்படுத்தியது. இதுவரை 141 எலும்புகூடுகள் கண்டறியப்பட்டுள்ளன, ஆனால் இது முடிவல்ல. இன்னும் எத்தனை சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. செய்மதி மூலம் எடுக்கப்பட்ட படங்களின்படி, இதுவரை 40% மட்டுமே அகழப்பட்டுள்ளது.*

*இந்தச் சோகக் கதை 1996ல் கிருஷாந்தி குமாரசாமி என்ற பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு புதைக்கப்பட்ட செய்தியுடன் தொடங்கியது. இந்த விவகாரம் தற்செயலாகவே வெளியானது.*

**செம்மணி அகழ்வுகள் - சர்வதேச மேற்பார்வையின் அவசியம்**

*இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போர் காலத்தில் தமிழர்கள் சந்தித்த மிகப்பெரிய மனித உரிமை மீறல்களில் ஒன்று செம்மணி புதைகுழி விவகாரம். இதில் பள்ளி மாணவி கிருஷாந்தி உட்பட பலர் ராணுவத்தால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர்.*

*கிருஷாந்தி வழக்கு – உண்மையைக் கிளறிய தொடக்கம் 1996-ல் பள்ளி மாணவி கிருஷாந்தி காணாமல் போனதையடுத்து, அவரைத் தேடிய அவரது பெற்றோர்கள் மற்றும் உறவினர்களும் காணாமலாகினர். விசாரணையின் போது, ராணுவத்தினர் செய்த கொடுமைகள் வெளிவந்தன. இதில் ஒரு ராணுவ கோப்ரலுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. அதன் பின்னர் தான் இந்தச் சோகமான உண்மை உலகிற்கு வெளிப்பட்டது – இது தனிப்பட்ட கொலை மட்டுமல்ல, ஒரே இடத்தில் பலர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருந்தனர்.*



காதர் மாஸ்டர்

*புதைகுழி அகழ்வுகள்-மறைந்த மாயைகளை வெளிக்கொணரும் பயணம் தற்போது செம்மணியில் மீண்டும் அகழ்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 15 சடலங்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் இது ஒரு பெரும் சின்னமாக உள்ளது. ஏனெனில் இலங்கை முழுவதும் 30க்கும் மேற்பட்ட இப்படியான புதைகுழிகள் இருப்பது அதிகாரபூர்வமாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சமீபத்திய தகவல்கள் – சாட்சிகள் முன்வருகிறார்கள் இந்த விவகாரம் மீண்டும் சுடச்சுட பேசப்படும் நிலையில், கிருஷாந்தி வழக்கில் குற்றவாளியாக இருந்த சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி, சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால் சாட்சி அளிக்கத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். இது, மறைக்கப்பட்ட பல உண்மைகளை வெளிக்கொணரும் வாய்ப்பாக இருக்கிறது.*

*சர்வதேச விசாரணையின் தேவை ஐ.சி.ஜே உள்ளிட்ட அமைப்புகள், இவ்விவகாரத்தில் சர்வதேச கண்காணிப்பு அவசியம் என வலியுறுத்துகின்றன. ஏனெனில் இவற்றில் தொடர்புடையவர்கள் பலர் உயர் அதிகாரிகள், ராணுவத்தினர், அரசியல் தலைவர்கள் என மிகப் பெரிய பாதுகாப்பு வளையத்திற்குள் உள்ளவர்கள். புதுவைச்சிகள், தடை முயற்சிகள் சமீபத்தில், சில ராணுவ புலனாய்வுத் துறையினர் சுவிஸ் நாட்டில் வசிக்கும் சாட்சிகளை விசாரிக்க முயற்சி செய்ததும், இது சர்வதேச அளவில் கவலைக்கிடையான நடவடிக்கைகளாகும் என்பதை காட்டுகிறது. மேலும், ரகசிய வதை முகாம்கள் தொடர்பான ஆதாரங்கள் மற்றும் விசாரணைகள் தொடர்ந்து தடை செய்யப்படுகின்றன.*

**செம்மணி புதைகுழி விவகாரம்: சர்வதேச மேற்பார்வையின் அவசியம்**

*இலங்கை யுத்த காலத்தில் தமிழர்கள் மேற்கொண்ட போராட்டங்கள், அவர்களுக்கு எதிரான படுகொலைகள், காணாமலாக்கங்கள் உள்ளிட்ட மாபெரும் மனித உரிமை மீறல்களின் ஓர் முக்கியமான எடுத்துக்காட்டாகத் தான் செம்மணி புதைகுழி காணப்படுகிறது. இதில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர். இந்த விவகாரத்தில் தற்போது சர்வதேசமே கவனம் செலுத்த வேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டது.*

*புதைக்குழிகளின் பின்னணி*

*1996ல் பள்ளி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம், செம்மணி புதைகுழி விவகாரத்துக்கு தொடக்கமாக அமைந்தது. விசாரணையின் போது அங்கு கிருஷாந்தியுடன் சேர்ந்து பலரும் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது.*

*சமீபத்தில் கட்டடப்பணிகளுக்காக தோண்டியபோது எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதன் மூலம் மீண்டும் இந்த விவகாரம் வெளிச்சத்திற்கு வந்தது. இதுவரை 141 எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இது, அகழ்வுப்பணியின் 40% மட்டுமே நடைபெற்று முடிவடைந்த நிலையை காட்டுகிறது.*

**அரசியல் மௌனம் மற்றும் சர்வதேச ஒளிப்புகள்**

*இந்நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் மௌனமாக இருப்பது வருந்தத்தக்கது. மாறாக, ஐ.சி.ஜே போன்ற அமைப்புகள் செம்மணி தொடர்பான சாட்சிகளையும் அகழ்வுப்பணிகள் தொடர்பான உரிமைகளையும் உலகிற்கு எடுத்துச் செல்ல முயலுகின்றன.*

*இலங்கையில் இதற்கு முன்பு நியமிக்கப்பட்ட பல ஆணைக்குழுக்கள் (எல்எல்ஆர்சி உள்ளிட்டவை) எந்தவிதமான தீர்வையும் வழங்கவில்லை. பொதுமக்களிடையே நம்பிக்கையின்மை உருவாகியுள்ளது. இதனால், இப்போது நடைபெறும் அகழ்வை சர்வதேச மேற்பார்வையுடன்*

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# மாற்றத்தை நோக்கி நகரும் மலையகம்

மருதன் ராம்

மலையக பெருந்தோட்ட மக்கள் மீதான அனைவரது பார்வையும் அவர்களின் தொழில் சார்ந்தே காணப்படுகிறது. 200 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் தேயிலை மற்றும் இறப்பர் துறையில் தொழில் புரியும் அந்த மக்களின் அடுத்த சந்ததியினர் அந்த துறையை விட்டு வெளியேறுகின்றனர். இது சாதக மற்றும் பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றது.



200 வருடங்களுக்கு மேல் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாகத் திகழ்ந்து வரும் தோட்டத் தொழிலாளர்கள் இன்னமும் அன்றாட வேதனத்துக்காக போராட வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய வாழ்வையே வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் ஏனைய மக்களின் வாழ்க்கைத்தரம் அபிவிருத்தியடைந்துச் செல்லும் சூழலில் மலையக மக்களின் வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் வேதனம் தொடர்பில் பல ஆண்டுகளாக மாறுபட்ட வாக்குறுதிகள் மாத்திரம் முன்வைக்கப்படுகின்றன. எனினும் அதே உத்வேகத்துடன் அதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுவதில்லை.

இந்தநிலையில் மலையக பெருந்தோட்ட மக்களின் இருப்பும் தற்போது கேள்விக்குறியாகி வருகின்றது. பெருந்தோட்ட மக்களின் இருப்பு குறித்த கேள்வி எழும் போது அந்த மக்களின் சமூக அடுக்கமைவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும். முதலில் சமூக அடுக்கமைவு என்றால் என்வென அவதானம் செலுத்தும் போது, ஒரு சமூகத்தில் வாழும் மக்களை செல்வம், வருமானம், கல்வி, குடும்பப் பின்னணி மற்றும் அதிகாரம் என்ற அடிப்படையில் வகைப்படுத்துவதாகும். இந்த நிலையில் தற்போது மலையக சமூகத்தில் பல்வேறு வடிவிலான அடுக்கமைவினை அவதானிக்க முடிகிறது. முதலாவதாக தேயிலை மற்றும் இறப்பு தோட்டங்களில் நிரந்தரமாக தொழில் செய்யும் பிரிவினரைக் குறிப்பிட முடியும்.

அண்மைய காலங்களில் இந்த பிரிவினரின் எண்ணிக்கை மிக வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதாக தரவுகள் தெரிவிக் கின்றன. தற்போது சுமார் 1,50,000 வரையான பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் மாத்திரமே தேயிலை தோட்டங்களில் பணியாற்றுகின்றனர். இந்த வீழ்ச்சிக்கு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. குறிப்பாக கல்வியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், தொழில் ரீதியாக நகரத்தை நோக்கிய புலம்பெயர்வு, மாற்று வாழ்வாதாரத்துக்கான தேடல், தோட்டத் தொழிலில் வழங்கப்படும் குறைந்த வேதனம், மரபு ரீதியான தொழில் நடைமுறைகள் மற்றும் தொழில் கௌரவம் போன்ற பல காரணிகள் இளம் தலைமுறையினரை இந்த துறையில் இருந்து தூரப்படுத்தியுள்ளது.

இந்த அடிப்படையில் பெருந்தோட்டங்களில் இருந்து அன்றாடம் தொழிலுக்காக வெளியிடங்களுக்கு செல்பவர்கள் அடுத்த கட்ட அடுக்கமைவாக உள்ளனர். இன்று தோட்டங்களில் தொழில் செய்யும் பிரிவினரை விட தொழில் செய்யாத பிரிவினரின் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படுகின்றது. அதில் 50 வீதமானவர்கள் தமது குடியிருப்புகளை தோட்டங்களில் வைத்துக்கொண்டு வாழ்வாதாரத்திற்காக விவசாயம் மற்றும் தோட்டங்களை அண்டிய நகரங்களிலும் கிராமங்களிலும் தொழில் செய்து வருகின்றார்கள். வர்த்தக நிலையங்கள், கட்டுமானத்துறை, உணவகங்கள், என அவர்களின் மாதாந்த வருமானம் சுமார் 25,000 ரூபாய் - 40,000 ரூபாவாகவே காணப்படுகின்றது. இந்த பிரிவினரின் எண்ணிக்கை கடந்த காலங்களில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இவர்கள் மத்தியில் காணியுரிமைக்கான கோரிக்கைளும் தாகமும் மிக அதிகமாகக் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. காரணம் நிரந்தர வாழ்வாதாரத்துக்கான வேட்கையாகும்.



பிறிதொரு பகுதியினர் இளம் வயது தொழிலாளர்கள். இவர்கள் குடும்ப பொறுப்புகளின் காரணமாக தோட்டங்களை விட்டு வெளியில் சென்று தொழில் செய்ய முடியாத காரணத்தால் தற்காலிக, பதிவு செய்யப்படாத தொழிலாளர்களாக தேயிலை தோட்டங்களில் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு வேதனத்தினை தவிர வேறு எந்த நன்மைகளும் கிடைப்பதில்லை. தோட்டக் கம்பனிகளுக்கு இது இலாபமாக அமைந்துள்ளதுடன், இதன் காரணமாக தொழிற் சங்க அழுத்தங்கள் மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் பெரியளவில் குறைவடைகின்றன.

அதேநேரம், கல்வி ரீதியான அடைவுகளின் காரணமாக எழுச்சிப்பெற்றுள்ள மற்றுமொரு பிரிவினரும் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ளனர். ஆசிரியர்கள், அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், கிராம சேவகர்கள், சமுர்த்தி அதிகாரிகள், தாதியர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனம், வங்கித் துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் இடைநிலை பதவி நிலைகளில் அவ்வாறானவர்கள் பணியாற்று கின்றனர். இவர்கள் ஒரு ஆதிக்கம் மிக்க சக்தியாக மலையக சமூகத்தில் வளர்ச்சியடைந்துள்ளார்கள்.

இப்பிரிவினரின் எண்ணிக்கையும் மிக வேகமாக அதிகரித்து வருவதனை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது. இதற்கு பல்கலைக் கழக அனுமதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் உயர் கல்வியில் ஏற்பட்டுள்ள விரிவாக்கம் என்பன காரணமாகும். சுமார் 15,000 பேர் வரை தற்போது மலையகத்தில் க.பொ.த உயர் தரப்பரீட்சைக்கு தோற்றுகின்றார்கள். இப்பிரிவினரில் கணிசமானவர்கள் தோட்டக் கட்டமைப்புக்குள் தமது குடியிருப்புகளை வைத்திருப்பவர்களாகவும் ஏனையோர் தோட்டங்களைவிட்டு வெளியேறி நகரங்களையும் கிராமங்களையும் அண்டி தமது குடியிருப்புகளை அமைத்துக் கொண்டுள்ளார்கள். இதில் அதிக எண்ணிக்கையினர் வாடகை குடியிருப்புகளில் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே, கல்வி கற்றவர்கள் படிப்படியாக தோட்டங்களை விட்டு வெளியேறுவது இன்னொரு போக்காகக் காணப்படுகின்றது. இவ்வாறு கல்வி கற்ற சமூகத்தினர் பெருந்தோட்டங்களை விட்டு வெளியேறுவதற்கு பல முக்கிய காரணங்களும் உள்ளன.



தொழில், வெளி உலகத் தொடர்பு, தங்களின் பிள்ளைகளின் கல்வி போன்ற காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன. அதேபோன்று இவர்களுக்கும் தோட்டக்கட்டமைப்பில் வாழும் மக்களுக்கு மிடையிலான தொடர்பு குறைந்து செல்வதனையும் அவதானிக்க முடியும். எனினும் இவ்வாறானவர்கள் மற்றையவர்களுக்கு முன்னுதாரணமாகவும் மாறி வருகின்றனர்.

இதேவேளை, மலையகத்தில் எழுச்சிப் பெற்றுள்ள பிறிதொரு பிரிவினராக வர்த்தக சமூகத்தினரைக் குறிப்பிட முடியும். அவர்களை வியாபாரத்தின் அளவு, தன்மை, அதன் விரிவாக்கம், செல்வம், இலாபம் என்ற அடிப்படையில் வகைப்படுத்தலாம். குறிப்பாக கொழும்பு, கண்டி, பதுளை, மாத்தளை மற்றும் நுவரெலியா போன்ற மாவட்டங்களில் அமைந்துள்ள நகரங்களில் இவர்கள் செல்வாக்கு மிக்க பிரிவினராக காணப்படுகின்றனர்.

அரசியல் ரீதியாகவும் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளுக்கு பிரசார நிதியினை வழங்கி அதன் ஊடாக அரசியல் செயற்பாடுகளிலும் அவர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். இவர்களின் குடியிருப்புகள் நகரங்களை மையப்படுத்தியதாகக் காணப்படுகின்றனர். கல்வி கற்ற சமூகத்தினரும், வர்த்தக சமூகத்தினரும் மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறான வளர்ச்சி போக்கு மலையகத்தில் தொடர்ந்தும் பதிவாகி வருகின்ற போதிலும் மறுபுறம் பெருந்தோட்டங்களை விட்டு வெளியேறும் பிரிவினரின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றமையை அவதானிக்க கூடியதாக

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# செம்மணி புதைகுழிகளும் தமிழ்நாடும்

**தோழர் பாஸ்கர்**

'செம்மணி' புதைகுழிகளுக்கு தமிழகத்தில் எதிர்ப்பும் தாக்கமும் நடந்தேறியிருக்க வேண்டிய அளவுக்கு இல்லவே இல்லை.

ஈழச் சிக்கலின் குத்தகையாளர்களும் போதியவாறு வினையாற்றவில்லை. தமிழகத்தில் சுமார் ஆறு மாதங்கள் கழித்து சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இதுதான் நிலைமை.

முள்ளிவாய்க்கால் பற்றி பேசி பிழைப்பை நடத்தியோர், செம்மணி பற்றி பெரியளவில் பேசுவதில்லை.



ஈழத்திற்கான தமிழக அதிபரும் குடும்பச் சிக்கலில் சிக்கிக் கொண்டிருப்பதாலோ, முப்பாட்டன் முருகனுடைய மாமாவின் ஆட்சியே 'இந்து முன்னணி'யாகவும் 'விஎச்பி'யாகவும் ஈழத்தில் நடைபெறுவதாலோ, இவ்வாறு மயான அமைதியில் இருப்பதாக தெரிகிறது.

செம்மணியில் தோண்டி எடுக்கப்படும் பிணங்கள் இந்துக்களே என்றாலும், 'இந்து' அதானியின் முதலீடு பாதிக்கப்படும் என்பதால், 'இந்து' பிணங்களைப் பற்றி கவலைப்படவில்லை. பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தை காப்பாற்றிக்கொள்வதற்காக முழு இந்துவாக மாறிவிட்ட தமிழக ஆதீனங்களும், அவை இந்து பிணங்கள் என்பதால் 'செங்கோல்' உணர்வுடன் 'ராம் ராம்!' என்று இருக்கிறார்கள்.

மறுபுறத்திலோ, தமிழகத்தில் ஆளும் கட்சியையும் உள்ளடக்கிய மையநீரோட்டக் கட்சிகள், செம்மணி புதைகுழிகள் குறித்து தமது கண்டனத்தைத் தெரிவிக்கவேயில்லை.

சிறு அரசியல் அமைப்புகள் மற்றும் தமிழ் திரைப்படத் துறையின் சில நடிகர்களைத் தவிர. செம்மணி புதைகுழிகளை கண்டிப்பதற்கு 'ஈழ விடுதலை' எனும் கோரிக்கையை ஆதரிக்க வேண்டிய அவசியம் இல்லையென்றாலும், இது தான் நிலைமை.

இந்திய ஆட்சியாளர்களிடம் இந்த அளவுக்கு கூட எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், இவர்களும் ஏற்கனவே புதைகுழிகளை பஞ்சாபில் வைத்திருந்தார்கள். தவிர, புதைகுழிகளை அரசியல்ரீதியாக ஆதரிப்பதுடன், அவற்றின் பிதாமகன் ஹிட்லரின் சீடர்களே ஆவர்.

அத்துடன், புதைகுழிகளை தர்மஸ்தலாவிலும் எவரும்அறியாதஇடங்களிலும்அமைப்பவர்களும் ஆவர்.

தமிழகத்தில் இத்தகைய புதைகுழிகளை கொள்கை ரீதியாக அதிகாரபூர்வமாக எதிர்க்கக்கூடிய மையநீரோட்ட அரசியல் கட்சிகள், ஆளும் கட்சியையும் உள்ளடக்கி, நடைமுறையிலும் செம்மணி புதைகுழிகளை எதிர்க்கவேண்டும். குறைந்தபட்சம் ஒரு அறிக்கையின் வாயிலாக வாவது இதை கண்டிக்கவேண்டும்.



இவ்வாறு அறிக்கை வெளியிட்டால் ஆட்சியும் கலைந்து விடாது; பதவியும் போய் விடாது.

எனினும், இவ்வாறுதான் இருக்கிறார்கள் தமிழக ஆட்சியாளர்கள்.

இவ்விவகாரத்தில் மையநீரோட்டக் கட்சிகள்தான் இவ்வாறு என்றால், சிறு அரசியல் அமைப்புகளும் முன்போல் பெரியளவில் எதிர் வினை ஆற்றவில்லை.

ஈழச்சிக்கலுக்காகவே உருவான அமைப்புகளும் அவ்வாறே. இத்தகைய சிறு அமைப்புகள், ஈழப் போரின் உச்சத்தின்போதும் (2008–09) பாலசந்திரன் படுகொலை விவகாரத்தின் போதும் வினையாற்றிய அளவுக்கு, செம்மணி புதைகுழிகள் விவகாரத்தில் இதுவரை வினை யாற்றவில்லை.

ஒருவேளை இத்தகைய சிறு அமைப்புகள் சோர்ந்துவிட்டனவா? சிறு அமைப்புகளில் ஒரு பிரிவினர், திமுகவின் ஆட்சியை ஆதரிக்கும் பெரியாரிய அமைப்புகள், இந்த ஆட்சிக்கு நெருக்கடியை கொடுக்கக்கூடாது என்று இவ்வாறு இருப்பதாகத் தோன்றுகிறது.

ஆனால், திமுகவை முதன்மையாக எதிர்க்கும் சிறு அமைப்புகளும் தமக்கே உரியளவில் எதிர்க்காமல் இருக்கின்றன.

இந்த அமைப்புகளில் ஒரு பிரிவு அதிமுகவையும், நாம் தமிழர் கட்சியையும் ஏதோ ஒரு வகையில் மறைமுகமாக ஆதரிப்பதுதான் காரணமா?

அதிமுகவுக்கும் நாம் தமிழர் கட்சிக்கும் நெருக்கடி ஏற்படக்கூடாது என்பதாலா?

இவ்விரு கட்சிகளையும் இயக்குவது பாஜக என்பதாலா?

அல்லது, தமிழகத்தில் ஈழ ஆதரவு அமைப்புகளுக்கு படியளக்கும் ஒரு பிரிவு புரவலர்களான புலம்பெயர் ஈழத் தமிழர்கள் உரியளவில் அழுத்தம் அளிக்கவில்லையா?

புலம்பெயர் ஈழத் தமிழர்களிடம் பணம் வாங்கியே ஈழ ஆதரவு நாடகத்தை நடத்திவந்ததால், இன்று இதனால் செம்மணி புதைகுழிகள் விவகாரத்தில் ஈழ ஆதரவு அமைப்புகள் முடங்கி நிற்கின்றன.

எனினும், உண்மையான ஈழ ஆதரவு அமைப்புகள் இந்நிலைமையிலிருந்து படிப்பினையை மேற்கொண்டு, இக்கையறு நிலைமையிலிருந்து வெளியேற வேண்டும். அவ்வாய்ப்பு கிடைக்கும்.

ஈழ ஆதரவிலான உண்மையான சக்திகள் மீண்டும் பிறப்பர்.

• • •

*18,500 குழந்தைகள்* ... தொடர்ச்சி ...

காத்திருக்கும் பசியால் வாடும்மக்களை துப்பாக்கியால் சுடவும் பயன் படுத்தப்படு கின்றன” என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள்காசாபகுதிக்குள்நுழையஅனுமதிக்கப்பட வேண்டும் என்றும், இஸ்ரேலின் முற்றுகையால் ஏற்படும் பட்டினியை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை தேவை என்றும் பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு (CPJ) தெரிவித்துள்ளது. “உலகம் இப்போது செயல்பட வேண்டும்” என்று பி.ஜே.கே. குழுவின் பிராந்திய இயக்குநர் சாரா குதா கடந்த வியாழக்கிழமை (7) தெரிவித்துள்ளார்.



# விஸ்பரூபமெடுக்கும் ஈரான் பின்னணியில் சீனா

**சென்றவார தொடர்ச்சி (இறுதிப் பகுதி)**

**வேல்ஸில் இருந்து அருஸ்**

ஈரானிய பிராந்திய நீர்நிலைகளுக்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ள இந்தக் கப்பல்கள், மேற்குலகத்தின் விமானம் தாங்கிகளை குறிவைக்க அல்லது முக்கிய எண்ணெய் போக்குவரத்து கப்பல்களை பாதுகாக்கக்கூடிய மொபைல் ஏவு தளங்களாகச் செயல்படுகின்றன. ஈரானின் நிலத்தடி கடற்படையில் சீன தனது டார்பிடோ வழிகாட்டுதல் எனப்படும் கப்பல்களை அழிக்கும் ஏவுகணைகளை ஒருங்கிணைப்பது நேட்டோ கடற்படை கட்டளை மையங்களுக்கு சிவப்புக் கொடிகளை காண்பித்துள்ளது.



ஈரான் முன்பு கொண்டிருக்காத *passive sonar and deep sea acoustic mapping* திறன்களைப் பயன்படுத்தி எதிரி கப்பல்களை அமைதியாகக் கண்காணிக்க இந்த அமைப்புகள் உதவுகின்றன. சீன உரிமத்தின் கீழ் தற்போது உள்நாட்டில் தயாரிக்கப்படும் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளுடன் இவை இணைந்துள்ளதால் அது வெளிநாட்டு கடற்படைகளை அச்சுறுத்தும் ஈரானின் திறன் அதிவேகமாக அதிகரித்துள்ளது. இந்த புதிய உள்கட்டமைப்பில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள், உயிர்வாழும் தன்மை மற்றும் நீண்ட கால மோதல் தயார்நிலையின் ஒரு உத்தியை எடுத்துக்காட்டுகின்றன.

நேரடித் தாக்குதலின் போது தேவையற்ற உயிர் இழப்புக்களை தவிர்க்கும் பொறிமுறை மற்றும் கட்டளை மையங்களுடன் ட்ரோன் தளங்கள் கட்டப்பட்டுள்ளன.

நிலத்தடி சுரங்கப்பாதைகள் வழியாக பல கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இரண்டாம் நிலை கட்டுப்பாட்டு அறைகள் முதலாம் நிலை கட்டுப்பாட்டு தளங்கள் பாதிப்படையும் சந்தர்ப்பத்தில் அதன் பொறுப்பை எடுக்ககும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. எரிபொருள் சேமிப்பு தொட்டிகள் நிலத்தின் கீழ் ஆழமாக புதைக்கப்பட்டுள்ளன, கான்கிரீட் மற்றும் உருக்கு கவசங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை அரை வினாடிக்கும் குறைவான நேரத்தில் செயல்படும் தீ அணைப்பு அமைப்புகளும் உள்ளன.





ஏவுகணை தளங்களில் எதிரியின் வான்தாக்குததல் இலக்குகளை குழப்பும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட போலியான ஏவுகணைகள் அதாவது டிகோய் திறப்புகள் மற்றும் ரேடார் ஜாமிங் சாதனங்கள் உள்ளன. ஈரானின் விமான எதிர்ப்பு அமைப்புகளில் குரூஸ் ஏவுகணைகள் மற்றும் உள்வரும் ட்ரோன்களை நடுநிலையாக்கும் திறன் கொண்ட இயக்கவியல் மற்றும் ஆற்றல் அடிப்படையிலான இடைமறிப்பான்கள் இரண்டும் அடங்கும். இந்த பாதுகாப்பு அடுக்குகளுடன் சைபர் பாதுகாப்பும் இணைக்கப்பட்டுள்ளது. ஈரானிய மற்றும் சீன சைபர் பாதுகாப்பு குழுக்கள் கூட்டாக ஃபயர்வால்களை உருவாக்கியுள்ளன, அவை தேவையான நேரத்தில் வெளிநாட்டு ஊடுருவல் முயற்சிகளைக் கண்டறிந்து தனிமைப்படுத்த செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துகின்றன.

தரவு பதிவுகள் தளத்திற்குள் உள்ள பல சேமிப்புக்களில் *(Servers)* பரவலாக்கப்பட்டுள்ளன, இதனால் ஒற்றை சைபர் தாக்குதலால் கட்டளை கட்டமைப்புகளை சிதைக்க இயலாது. கடற்படைப் பிரிவுகளில் கூட, குழு உறுப்பினர்கள் அணியக்கூடிய பயோமெட்ரிக் கியர் பொருத்தப்பட்டுள்ளன.



அவை உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களின் பாவனையை கண்காணிக்கின்றன, மேலும் சேதம் அல்லது மாசுபாட்டைக் கட்டுப்படுத்தகப்பல் பெட்டிகளை சீல் வைக்கலாம். இந்த தற்காப்பு நடவடிக்கைகள் தடுப்பு மட்டுமல்ல, நீண்ட போருக்குத் தயாராக இருப்பதைக் காட்டுகின்றன. இந்த இராணுவ ஒப்பந்தத்தை தனித்துவமானதாகவும், ஆபத்தானதாகவும் மாற்றுவது அதன் நெகிழ்வுத்தன்மையும் மற்றும் மறுப்பும்.

இந்த ஒப்பந்தத்தை சீனா வெளிப்படையாக ஒப்புக் கொள்ளவில்லை, மேலும் ஈரான் அதன் ட்ரோன் மற்றும் ஏவுகணை திட்டங்கள் முற்றிலும் சொந்த தயாரிப்பு என்று தொடர்ந்து கூறி வருகிறது. இருப்பினும், அங்குள்ள மின்சுற்று பலகைகள், மின் அமைப்புகள் மற்றும் தடயவியல் பகுப்பாய்வு என்பன எல்லா இடங்களிலும் சீனக் கைரேகைகளை வெளிப்படுத்துகின்றன. இந்த ஒப்பந்தம் ஒரு மட்டு *(modular form)* வடிவத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒரு சீனா விவசாய ட்ரோன் இயந்திரங்கள் அல்லது வானிலை கண்காணிப்பு செயற்கைக்கோள்கள் போன்ற சிவிலியன் பெயர்களின் கீழ் ஆயுதங்கள் மற்றும் மென்பொருளை துண்டுகளாக வழங்குகிறது, அதே நேரத்தில் ஈரான் அவற்றை உள்நாட்டில் பொருத்துகின்றது.



சர்வதேச தடைகளைத் தவிர்த்து, நம்பத்தகுந்த மறுப்பைப் பராமரிக்க இது இரு நாடுகளையும் அனுமதிக்கிறது. மேலும், சீன பாதுகாப்பு நிறுவனங்கள் கட்அவுட்கள் மூலம் செயல்படுகின்றன. தென்கிழக்கு ஆசியாவை தளமாகக் கொண்ட மூன்றாம் தரப்பு ஷெல் நிறுவனங்கள், இந்த கொள்வனவுகளுக்கான நிதிப் பாதையைக் கண்டுபிடிப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது.

பணம் பெரும்பாலும் கச்சா எண்ணெய், கனிமங்கள் அல்லது கிரிப்டோகரன்சியில் ஊடாக பரிமாற்றப்படுகின்றன. இது பரிவர்த்தனை சங்கிலியை மேலும் மறைக்கிறது. இந்த மூலோபாய நன்மைகள் மகத்தானவை. உலகின் மிகவும் முன்னேறிய நாடாக ஈரான் மாறிவிட்டது.

ஈரான் உலகின் மிகவும் மேம்பட்ட சமச்சீரற்ற போர் கருவிகளைப் பெறுகிறது, அதே நேரத்தில் சீனா உலகளாவிய ரீதியில் எரிசக்தி விநியோகப் பாதையின் நுழைவாயிலில் உள்ள ஒரு விசுவாசமான கூட்டாளியைப் பெறுகிறது. இது பாரசீக வளைகுடா வழியாக செல்லும் எண்ணெயை நம்பியிருக்கும் மேற்கத்திய பொருளாதாரங்கள் மீது பெய்ஜிங்கிற்கு மறைமுக

தொடர்ச்சி 15ஆம் பக்கம்




**இதயச்சந்திரன்**

ஐரோப்பிய ஒன்றியம் காலில் விழுந்தது போல் இந்தியாவும் விழுமென்று எதிர்பார்த்தார். அதாவது அமெரிக்க ஏற்றுமதிக்கு ஐரோப்பிய ஒனறியம் போல எல்லா நாடுகளும் *zero* வரி விதிக்க வேண்டுமென்பதுதான் டிரம்பின் எதிர்பார்ப்பு.அதற்கு இந்தியா இணங்கவில்லை.

இறுதிச் சுற்றில் சீனாவிடம் வருவார். அந்தப் பெரிய *party*, அமெரிக்காவில் பெரிய முதலீடுகளை செய்வதால் ஒரு பாரிய இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளோமெனச் சொல்வார் டிரம்ப். பாருங்கள்.

அதேவேளை *BRICS+* ஐ கூட்டச் சொல்லி பிரேசிலின் லூலா கேட்டுள்ளார். பிரிக்சிற்கு பொது நாணயம் தேவையில்லையென்ற இந்தியாவிற்கு, சில அழுத்தங்கள் அங்கு வரலாம். “அப்பவே சொன்னன் ...கேட்டியே கிளி” என்கிற குரல்கள் அங்கு ஒலிக்கும்.

அதற்கு முன்பாக உக்ரெயின் போரில் சில உடன்பாடுகள் எட்டப்படும் வாய்ப்புகள் உண்டு.

அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் வழமை போல் முட்டுக்கட்டை போடும்.

உக்ரேனின் கனிம வளங்களை அமெரிக்காவும் ரஷ்யாவும் பங்கிட்டால், தமக்கு ஏதுமில்லையா? என்பதுதான் ஐரோப்பிய நாட்டு தலைகளின் ஆதங்கம்.

தனது *trade deficit* பொருளாதாரத்தை மாற்றி யமைக்கவே வர்த்தகப்போர், வரிப்போர் என்கிற ஆயுதங்களை கையிலெடுத்துள்ளார் அதிபர் டிரம்ப்.

பலவீனத்திலிருந்து உருவான இவ்வகையான பொருளாதார சண்டித்தனங்களை, பல நாடுகள் புரிந்து கொள்ளும்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ,தான் உருவாக்கிய உலக ஒழுங்கு, அதனோடு இணைந்த நிதி மற்றும் நீதி நிர்வாக கட்டமைப்பு என்பவற்றிற்கு எதிராக களமிறங்க வேண்டிய நிலைக்கு அமெரிக்க *establishment* வந்துள்ளது.

சுயாதீனமாக இயங்கும் என்று சொல்லப்பட்ட *Federal Reserve* இன் தலைவரையே வெருட்டுகிறார் டிரம்ப்.

அடுத்ததாக *Intel* கார்ப்ரேட் கம்பனிக்கும் அச்சுறுத்தல் விடுக்கிறார். இவர் தனது உள்நாட்டு வெளிநாட்டு கட்டமைப்புகள் மீது அழுத்தங்களை கொடுப்பதன் தாற்பரியம் என்ன?

தனது “வரி அழுத்தம்’ வேறு விளைவுகளை உருவாக்க முன், ரஷ்யா-சீனாவுடன் ஒரு இணக்கப் பாட்டினை டிரம்ப் ஏற்படுத்துவார் என்று தெரிகிறது.

ஆகவே சில வாரங்களில் உலக ஒழுங்கின் புதிய திசை தெரிந்துவிடும்

**சம்பூர் மனிதப் .. . தொடர்ச்சி ...**

செயலாளர், குறித்த பிரதேச காணி உத்தியோகத்தர் மற்றும் குறித்த பிரதேச கிராம உத்தியோகத்தர் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது குறித்த வழக்கு தொடர்பான ஆலோசனைகள் மாவட்ட நீதிபதியினால் ஒவ்வொருவரிடமும் கேட்டறியப்பட்டபோது குறித்த காணி தொடர்பாக பிரதேச செயலாளர், பிரதேச சபை செயலாளர், தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் வினவப்பட்டதுடன் குறித்த காணி அரச காணி எனவும் குறித்த பகுதி மயானமாகப் பாவிக்கப்பட்டமைக்கான எந்தவித ஆவணங்களும் இல்லை எனவும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

அத்துடன் குறித்த பகுதியில் கண்டெடுக் கப்பட்ட எச்சங்கள் தொடர்பாக மேலதிக தகவல்களை சட்ட வைத்திய அதிகாரியிடம் கோரியபோது, குறித்த எச்சங்கள் மனிதர்களுக்குரிய எச்சங்கள் எனவும் அவை இயற்கை மரணத் தினூடாக இடம்பெற்ற எச்சங்களா அல்லது குற்றத்தினூடாகப் புதைக்கப்பட்ட எச்சங்களா என்பது தொடர்பில் தங்களால் கூற முடியாது எனவும் ஆனால் அவை மூன்று மனிதர்களுடைய எச்சங்கள் எனவும் ஒன்று 25 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட வயதைக் கொண்ட ஆணினுடைய எச்சம் எனவும், மற்றையது 45 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட வயதைக் கொண்ட ஆணின் எச்சம் எனவும் மூன்றாவது 25 வயதிற்கும் குறைந்த ஆணுடைய எச்சம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் வேறு இரு மனிதர்களுடைய இரு எச்சங்கள் ஒரே இடத்தில் இருந்து கிடைத்ததன் மூலமாக இது இயற்கையான மரணத்தின் ஊடாக புதைக்கப்பட்டது என்ற முடிவுக்கு வர முடியாது எனவும் கூறியிருந்தார்.

அதேபோன்று தேசிய கண்ணிவெடிகள் அகற்றும் உத்தியோகத்தர் தெரிவிக்கையில், இனிமேல் இதனை அகழ்வதாக இருந்தால் அது அபாயகரமாக இருக்கின்ற காரணத்தினால் கிழக்கு மாகாண பாதுகாப்பு கட்டளைத் தளபதியின் அனுமதியுடன் கிழக்கு மாகாண பாதுகாப்பு படையின் பொறியியல் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஊடாகவே குறித்த பிரதேசம் அகழப்பட வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதனடிப்படையில் கண்டெடுக்கப்பட்ட எச்சங்கள் மனித எச்சங்கள்தான் எனும் காரணத் தினாலும், அவை பலவயது மனிதர்களுடைய எச்சங்களாகக் காணப்படுவதாலும், அப்பகுதியில் மயானம் இருந்தமைக்கான சான்றுகள் இல்லாத காரணத்தினாலும் குறித்த பிரதேசத்தினை மீளவும் தோண்டி அது தொடர்பான மேலதிக விசார ணைகளை செய்ய வேண்டும் என்பதற்காக கிழக்கு மாகாண பாதுகாப்பு கட்டளைத் தளபதியின் அனு மதியுடன் பாதுகாப்புப்படையின் பொறியியல் பிரிவின் உத்தியோகத்தர்களின் ஊடாக மனித வலு கொண்டு தோண்டுவதற்கான கட்டளையை நீதி மன்றம் 06.08.2025 வழங்கியுள்ளதுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி குறித்த வழக்கை மீள அழைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் அங்குள்ள மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் இடம்பெயர்வின் பின்னர் தாம் மீள்குடியேறிய இப்பிரதேசத்தில் மக்கள் நடமாடியதாகவும், ஆடு,மாடுகள் நடமாடுவதாகவும், மீனவர்கள் நடமாடுவதாகவும் அதனால்தான் இங்கு மீனவர்க்கக்கான கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது,சிறுவர் பூங்கா அமைக்கப் பட்டுள்ளது, சம்பூர் படுகொலை நினைவுத் தூபியும் அமைக்கப்பட்டுள்ளது அவ்வாறான இந்தப் பிரதேசத்தில் ஏன் திடீரென கண்ணி வெடி அகழ்வு நடந்தது என்பது தமக்கு பலத்த கேள்வியாகவுள்ளதாகவும் ஆனால் இப்பிர தேசத்தில் யுத்த காலத்தில் சண்டைகள் நடந்துள் ளன எனவும், புலிகளின் முகாம் இருந்ததாகவும், சம்பூர் படுகொலையின் போது கொல்லப்பட்ட சிலர் புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் பல விடயங்களையும் கூறினாலும் பலத்த கேள்விகளை யும்,சந்தேகங்களையும் எழுப்பியுள்ள நிலை யில் இவ் அகழ்வுப் பணி தொடரவுள்ளது குறிப் பிடத்தக்கது.

**சம்பூர் படுகொலை நீதிக்காகக் குரல் கொடுப்போம் பிரார்த்திப்போம்.**

• • •

**மன்னார் காற்றா ... தொடர்ச்சி ...**

பொதுஅமைப்புகளும் கோருகின்றன.

இருப்பினும், பாதிப்புகள் எதுவும் ஏற் படாது என்ற அடிப்படையில், மன்னார்த் தீவில் காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்களை அமைப்பதற்கு கடந்தகால அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், மக்களுக்கு அதன்மீது நம்பிக்கை இல்லை. மன்னார்த் தீவினுள் காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டால் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என்பதே மக்களின் நிலைப்பாடாக உள்ளது.

குறிப்பாக, கடந்த யுத்தகாலத்தில் அரசாங்கத்தால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள், எமது மக்கள் நம்பி தஞ்சம் புகும்போது, அரசுப் படைகளால் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு, அப்பாவித் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இவ்வாறான பல சம்பவங்கள் கடந்தகாலத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவங்களால் அரசாங்கத்தின் மீது எமது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். அதைப் போலவே, மன்னார்த் தீவில் காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்கள் அமைப்பதற்கு பாதிப்பு இல்லை என அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டாலும், அதன்மீது எமது மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

மன்னார்த் தீவில் இத்திட்டத்தை அமுல்படுத்தினால் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என்ற ஐயப்பாடு மக்களுக்கு உள்ளது.

இதேவேளை, மன்னார்த்தீவில்காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்களை அமைக்கும் நோக்கில், வாகனங்களில் கொண்டு வரப்பட்ட காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்களின் பாகங்கள் தள்ளாடி பகுதியில் வைத்து, மன்னார் மக்களால் வழிமறிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு, இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்களால் தடுத்துவைக்கப்பட்டிருந்த காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்களின் பாகங்கள், பலத்த பொலிஸ் பாதுகாப்புடன், மக்களின் எதிர்ப்பை மீறி மன்னார்த் தீவிற்குள் அடாவடித்தனமாக எடுத்துச் செல்லப்பட்டுள் ளன.

இந்த விடயத்தை ஏற்றுக்கொள்ள முடி யாது. மக்கள் விரும்பாத ஒரு திட்டத்தை ஒருபோதும் அத்துமீறித் திணிக்க முடியாது. அரசு என்பது மக்களுக்காக இருக்கவேண்டும்; மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஒன்றை அத்துமீறித் திணிப்பதாக இருக்கக்கூடாது.

எனவே, மக்கள் ஏற்றுக்கொள்ளாத இத்திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். — என்றார்.

**விஸ்பரூப ... தொடர்ச்சி ...**

செல்வாக்கை அதிகரிக்கின்றது. நிதி ரீதியாக, இந்த ஒப்பந்தம் பில்லியன் கணக்கான மதிப்புடையது.

சீன நிறுவனங்களிடம் இருந்து பாதுகாப்பு ஆயுதங்களை கொள்முதல் செய்வதற்காக ஈரான் கடந்த 18 மாதங்களில் 32 பில்லியன் டாலருக்கும் அதிகமான நிதியை உறுதியளித்துள்ளதாக கசிந்த வர்த்தக ஆவணங்கள் கூறுகின்றன. இவற்றில் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணை பாகங்கள் மட்டுமல்லாது கட்டளை மையங்களுக்கான மென்பொருள், சைபர் பாதுகாப்பு தளங்கள் மற்றும் கடற்படை பொறியியல் வரைபடங்களும் அடங்கும். பதிலுக்கு, சீனா அதிக தள்ளுபடி விலையில் எண்ணெய், அரிய பூமி தாதுக்களுக்கான ஆரம்ப உடன்பாடுகளை மேற்கொண்டுள்ளது மேலும் சிரியா, ஏமன் மற்றும் வளைகுடாவில் மேற்கொள்ளப்படும் ஈரானிய நடவடிக்கைகளிலிருந்து நிகழ்நேர போர்க்களத் தரவைப் பெறுகிறது.

இந்தத் தரவுகளை சீன இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகங்கள் தங்கள் சொந்த தந்திரோபாய உருவகப்படுத்துதல்கள் மற்றும் ஆயுத வடிவமைப்புகளை மேம்படுத்துவதற்காக மீண்டும் பயன்படுத்துகின்றன. இந்த ஏற்பாடு பரஸ்பர நன்மை பயக்குமாறு ஆழமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. ஈரான் போன்ற அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாடு உலகளாவிய ரீதியின் விமர்சனங்களைத் தூண்டாமல் இந்த அளவிலான ஆதரவைப் பெற முடிந்தால் அது ஒரு ஆபத்தான முன்னுதாரணமாக அமைக்கிறது.

ஏனைய முரட்டு நாடுகள் இதைப் பின்பற்றுவதற்கான கதவைத் இது திறக்கிறது. இதனால் சர்வதேச சமூகம் ஒரு சங்கடத்தை எதிர்கொள்கிறது. இப்போதே தலையிட்டு, மோதல்கள் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்களை மேற்குலகம் ஏற்படுத்தலாம் அதன் மூலம் இந்த உடன்பாட்டை ஆரம்பத்திலேயே முறியடிக்கலாம் இல்லை என்றால் இந்தக் கூட்டணி கட்டுப்படுத்தப்படாமல் வளர அனுமதித்து, போரின் எதிர்காலத்தை மறுவடிவமைக்கும் பலத்தை அவர்களுக்கு வழங்கியதாக அமையும் என மேற்குலக அவதானிகள் கருதுகின்றனர்.

இறுதியில், இந்த இரகசிய ஒப்பந்தம் உலகளாவிய இராணுவ கூட்டணிகள் எவ்வாறு உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஒரு அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்திவிடும். முறையான ஒப்பந்தங்கள் மற்றும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட ஆயுத ஒப்பந்தங்களின் காலம் கடந்துவிட்டது.

நாம் பார்ப்பது பாதுகாப்பு மூலோபாயத்தில் ஒரு அமைதியான புரட்சி, அங்கு அதிகாரம் குறியீடு மூலம் மாற்றப்படுகிறது, அங்கு தளங்கள் நிழலில் கட்டமைக்கப்படுகின்றன, மேலும் அவை தொடங்கியிருப்பதை உலகம் உணரும் முன்பே போர்கள் நடத்தப்படலாம்.

ஈரானும் சீனாவும் திருட்டுத்தனம், தொழில்நுட்பம் மற்றும் லட்சியத்தை ஒன்றிணைத்து பூமியில் மிகவும் முன்னேறிய இராணுவங்களுக்கு கூட சவால் விடக்கூடிய ஒரு ஒருங்கிணைந்த சக்தியாக மாற்றியுள்ளன. இப்போதைய கேள்வி என்னவெனில் இந்த மாற்றத்திற்கு மேற்குலகம் பதிலளிக்குமா என்பது அல்ல, ஆனால் எவ்வளவு விரைவாக, எந்த சக்தியுடன் பதிலளிக்கும் என்பதே. ஏனெனில் அடுத்த போர் ஒரு பிரகடனத்துடன் தொடங்காமல் போகலாம். இது மாண்டரின் மொழியில் திட்டமிடப்பட்ட ஒரு மறைவான தளத்திலிருந்து ஏவப்பட்ட ஒரு ட்ரோனுடன் தொடங்கலாம் மற்றும் மிகவும் தாமதமாகும் வரை ரேடாரின் கீழ் பறக்கவிடப்படலாம்.

**தகவல் உதவி : *IronWing Command***

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

JR Print
www.jrprint.com
WhatsApp 07939 998730
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

**தமிழர் தாயக ... தொடர்ச்சி ...**

மூதூர் குமாரபுரத்தில் 24 உயிர்கள் காவு கொடுக்கப்பட்டன. அதுபோல, யுத்த சூழ் நிலையில் தனியார் தொண்டு நிறுவனத்தில் பணியாற்றிய 17 தமிழ் பேசும் சகோதரர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இது இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாக உறவுகள் கூறுகின்றனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியைப் பெறுவதற்கு முன், வடகிழக்கு தமிழ் மக்களுக்கு பல வாக்குறுதிகள் அளித்தும், அதை நிறைவேற்றாமல், அதற்கு எதிராகவே செயல்பட்டது.

மக்களின் தனியார் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. திருகோணமலையில் புல்மோட்டை, ஆத்திக்காடு வயல்வெளி, அரிசிமலை ஆகியவை பௌத்த பிக்குவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. முத்துநகர் விவசாய நிலம் தனியார் நிறு வனங்களுக்கு சூரிய மின் சக்திக்காக வழங்கப் பட்டுள்ளது. இதுபோன்ற திட்டங்கள் பல தொடங்கப்பட்டுள்ளன. இதனால், அப்பாவி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய விடயங்களை எதிர்த்து, மக்கள் பல சாலை மறியல் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர் மற்றும் முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே, தற்போதைய அநுர அரசாங்கமே தீர்வுகளை வழங்க வேண்டும் என்பதே, போராட்டக்காரர்களின் உரிமைப் போராட்டத்தின் நோக்கமாகும்.

• • •

**அமெரிக்கா - ரஸ் ... தொடர்ச்சி ...**

இருக்கும் "பல நண்பர்கள்" இருப்பதாகவும், ஒரு விருப்பமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸை சுட்டிக்காட்டியதாகவும் புடின் குறிப்பிட்டார்.

மேற்கத்திய ஊடக அறிக்கைகளின்படி, விட்காஃப் மாஸ்கோவிற்கு விஜயம் செய்த உடனேயே அமெரிக்க ஜனாதிபதியின் உதவியாளர்கள் ஒரு சாத்தியமான உச்சிமாநாட்டிற்குத் தம்மை தயார் செய்யத் தொடங்கிவிட்டனர்.

மாநாட்டிற்கான திட்டங்களை யார் தொடங்கினர் என்பது குறித்து கருத்து தெரிவித்த புடின், "இரு தரப்பிலும்" ஆர்வம் காட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

உக்ரைனின் விளாடிமிர் ஜெலென்ஸ்கியை உள்ளடக்கிய முத்தரப்பு சந்திப்பு என்ற யோசனையை விட்காஃப் முன்வைத்ததாகக் கூறப்படுகிறது. இருப்பினும், மாஸ்கோ இது வரை கருத்து தெரிவிக்க மறுத்து வருகிறது.

ஜெலென்ஸ்கியைச் சந்திக்கத் திறந்திருப்பீர்களா என்று நேரடியாகக் கேட்டபோது, புடின் பதிலளித்தார்: "பொதுவாக, எனக்கு அதில் எந்த எதிர்ப்பும் இல்லை. அது சாத்தியம். ஆனால் சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்" என தெரிவித்தார்.

ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கான உக்ரைனியத் தலைவரின் சட்டப்பூர்வ அதிகாரம் குறித்து மாஸ்கோ பலமுறை கவலை தெரிவித்துள்ளது. ஜெலென்ஸ்கியின் ஜனாதிபதி பதவிக்காலம் 2024 இல் முடிவுற்றது, ஆனால் அவர் இராணுவச் சட்டத்தை மேற்கோள் காட்டி புதிய தேர்தல்களை நடத்தவில்லை. அதன் பின்னர், மாஸ்கோ அவரை "சட்டவிரோதமான அரசு" என்று முத்திரை குத்தியுள்ளது மற்றும் உக்ரைனில் சட்டப்பூர்வ அதிகாரம் பாராளுமன்றத்திடம் உள்ளது என்று வலியுறுத்தியுள்ளது.

**செம்மணிப் புதைகுழி ... தொடர்ச்சி ...**

தொடர வேண்டிய அவசியம் எழுகிறது.

**சர்வதேச விசாரணையின் சிக்கல்கள்**

இலங்கைக்கு பாரன்சிக் ஆய்வுகளுக்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகள் இல்லையென ஐ.சி.ஜே அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, இது சர்வதேச அளவில் சுயாதீன விசாரணையாக நடத்தப்பட வேண்டியதாகும். ஆனால், சர்வதேச விசாரணைகளும் அரசியல் வாதங்களுக்கு உட்பட்டு சரியாக செயல்படாத நிலை உள்ளது.

**விளைவுகள் மற்றும் தீர்வுகள்:**

**இந்த விசாரணைகள் சாத்தியமாக உருப்பட வேண்டும் என்றால்:**

- சர்வதேச சட்ட வல்லுநர்கள் மற்றும் ஊடகங்கள் தொடர்ச்சியாக கண்காணிக்க வேண்டும்.
- தமிழர்களோடு உண்மையான நெறிமுறைகளுடன் செயல்படக்கூடிய சிங்கள மனித உரிமை வழக்கறிஞர்களையும் சேர்த்து விசாரணைகள் முன்னெடுக்க வேண்டும்.
- சர்வதேசத்தில் உள்ள தமிழ் தொழில்நுட்ப நிபுணர்கள், சட்டவல்லுனர்கள், மனித உரிமை போராளிகள் ஒருங்கிணைந்து செயல் பட வேண்டும்.

**செம்மணி அகழ்வுகள் - சர்வதேச மேற்பார்வையின் அவசியம்**

இலங்கையில் நடைபெறும் செம்மணி அகழ்வுப் பணிகள், தமிழ் மக்களின் நீண்டகால நியாய கோரிக்கைகளில் ஒன்றாக இருக்கின்றன. இந்த அகழ்வுகள் சரியான முறையில் நடக்க வேண்டுமென பல தரப்பில் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

சட்ட வல்லுநர்களின் பங்கு: இலங்கையில் இன்று இருக்கும் சட்ட வல்லுநர்களில் பெரும்பான்மையினர் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள். தமிழ் சமூகத்தில் உள்ள திறமையான நபர்கள் பெரும்பாலோர் வெளிநாட்டுக்கே சென்று விட்டனர். எனவே வெளிநாட்டிலுள்ள திறமைசாலிகளைத் திரட்டியும், உள்ளூர் சில நேர்மையான மனிதாபிமான சட்டவல்லுநர்களையும் இணைத்துக் கொண்டு விசாரணைகளை கண்காணிக்க வேண்டும்.

ஊடகங்கள் மற்றும் மக்கள் இயக்கம்: சட்டவல்லுநர்களுடன் ஊடகவியலாளர்களும் தொடர்ச்சியாக அனுப்பப்பட வேண்டும். இவ்வாறு அமைப்பதன் மூலம் மக்கள் குரலை உலகிற்கு தெரிவிக்க, தொடர்ச்சியான போராட்டங்கள் நடைபெற வேண்டும். "நீதி கொடு, தண்டனை செய்" எனும் கோஷங்களை முன்னெடுத்த இயக்கமின்றி, மாற்றம் சாத்தியமில்லை. காசா போன்ற இடங்களில் போராட்டம் நடத்தப்படுவதால் உலகத்தின் கவனம் அங்கு செல்கிறது என்பதையே நாம் காண்கிறோம்.

மொசாட் மற்றும் முரண்பாடுகள்: இஸ்ரேலின் மொசாட் அமைப்பு, இலங்கை ராணுவத்துக்கு பயிற்சி அளித்ததாகவும், இது முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் முரண்பாடு உருவாக்கும் அடிப்படையைக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய வெளிநாட்டு தலையீடுகளும் ஆராயப்பட வேண்டியவை.

ராஜ் சோமதேவாவைப் பற்றி: செம்மணியில் அகழ்வுப் பணியைத் தலைமையிலானவர் பேராசிரியர் ராஜ் சோமதேவா சிங்களர் என்பது ஒரு கேள்வியாக இருக்கலாம். ஆனால் நியாயம் வழங்குபவர் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது முக்கியமல்ல; அவர்கள் நேர்மையாக செயல்படுகிறார்களா என்பதே முக்கியம். ஆனால், நம்மிடம் இருப்பவர்களை விட வெளிநாட்டில் உள்ள தொழில்நுட்பம் மிகுந்த நிபுணர்கள் அதிகம். எனவே அவர்கள் வந்து நேரடியாக கண்காணிக்க வேண்டும்.

ஊடகங்களின் பங்கு: தற்போது தமிழ் ஊடகங்கள் மட்டுமே இச்செய்திகளை பரப்புகின்றன. சிங்கள ஊடகங்கள் பேசவில்லை; ஆங்கில ஊடகங்களில் சில செய்திகள் மட்டுமே வெளியிடப்படுகின்றன. எனவே, ஆங்கில ஊடகங்களில் சிறப்பாக விவரிக்கப்படவேண்டும். ஒரு சஞ்சிகை, ஆவணப்படம், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை வெளியிடப்பட வேண்டும்.

**ஐ.நா. ஆணையாளர் வருகை:**

செம்மணி பகுதியில் நடைபெற்ற அணையா விளக்கு போராட்டத்தில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வல்கர் நேரில் வந்து பார்வையிட்டார். இது தமிழ் மக்களுக்கு ஒரு தைரியத்தை அளிக்கக்கூடியது. செப்டம்பரில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை அமர்வில் செம்மணி விவகாரம் சர்வதேச சட்ட விழுமியங்களுக்கு ஏற்ப நடத்தப்பட வேண்டும் என ஐ.சி.ஜே முன்மொழிந்துள்ளது.

பொருளாதாரச் செலவுகளும், மக்கள் நம்பிக்கையும்: பல ஈழத் தமிழர்கள் பெரும் செலவுகளுடன் ஜெனிவா சென்று விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். ஆனால் ஐ.நா-வுக்கு உள்ள அதிகாரமும் செயல்திறனும் பல இடங்களில் கேள்விக்குறியாக உள்ளது. அங்கு நடத்தப்படும் நடவடிக்கைகள் பல்வேறு அரசியல் அழுத்தங்களால் பாதிக்கப்படுகின்றன.

மக்கள் மயமான இயக்கம் தேவை: தமிழர் பிரச்சனை ஒரே ஒரு அமைப்பின் கையில் இருப்பதால் உலகம் அதை அந்த அமைப்பின் பிரச்சனையாக மட்டுமே பார்க்கிறது. இது தவறு. இது மக்களுடைய பிரச்சனையாக மாற வேண்டும். போராட்டம்அடிமட்ட மக்களிடமிருந்து தொடங்க வேண்டும்.

**முடிவுரை:**

**மக்கள் போராட்டம் நேரில் நடக்கும் போது தான் சர்வதேசத்தின் கவனமும் அமையும். அதனை ஆதரிக்க வெளியுலக ஆதரவும் தேவை. புலிக்கொடி, சிங்கக்கொடி போன்ற சின்னங்களால் அல்லாமல், பொதுமக்கள் சார்ந்த போராட்டமாக செம்மணி விவகாரம் மாறவேண்டும். இதுவே நாம் நீதி பெறும் வழி.**

• • •

**கருப்பு யூலை ... தொடர்ச்சி ...**

உள்ளது. குறிப்பாக பல பெருந்தோட்ட பகுதிகளில் காணப்படும் பல வீடுகள் தற்போது மூடப்பட்டு அல்லது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இந்தநிலைமை மாற்று சமூகமொன்றுக்கு மலையகத்தின் மீதான ஆதிக்கத்துக்கு வழிவகுக்கும். அவ்வாறு இடம்பெறுமானால் மலையக தமிழ் மக்கள் என்ற சமூகம் இல்லாமல் ஆக்கப்படும். அந்த மக்கள் எதிர்காலத்தில் நிலத்தொடர்பற்றவர்களாக மாறும் அச்சமும் உள்ளது.

• • •

**மட்டக்களப்பு ... தொடர்ச்சி ...**

அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டபோது மட்டக்களப்பு மாவட்டம் தனது பூர்விக நிலப்பரப்பின் ஒரு பகுதியை இழந்தது.

மட்டக்களப்பு மாவட்டம் அபிவிருத்தியடைய, மாகாணசபை அதிகாரம் பகிரப்பட்டு, அந்த மாவட்ட மக்களே முடிவெடுக்கும் வகையில் ஆட்சி அமைக்கப்பட வேண்டும். அதற்காக கிழக்கு மாகாணசபை தேர்தல் நடைபெற்று, பூரண அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதே உண்மை.

• • •

**இந்தியாவிற்கு ... தொடர்ச்சி ...**

உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு, அவரது அறிக்கை வந்துள்ளது.

"8 மணி நேரம் மட்டுமே ஆகிறது. எனவே என்ன நடக்கிறது என்று பார்ப்போம். நீங்கள் இன்னும் நிறைய பார்க்கப் போகிறீர்கள்" என்று டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் நிலைத் தடைகள் என்பது, தடை செய்யப்பட்ட ஒரு நாட்டோடு தொடர்பு கொள்ளும் மூன்றாம் தரப்பினரை குறிவைத்து, தடை விதிக்கும் நாட்டின் சந்தையை அவர்கள் அணுகுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், அவர்களை குறிவைக்கும் தண்டனைகள் ஆகும்.

"இதனிடையே, எங்களைப் பொறுத்தவரை, விவசாயிகளின் நலனே எங்கள் முதல் முன்னுரிமை" என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமை (7) தடைகள் தொடர்பாக பேசும் போது தெரிவித்துள்ளார். "விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் நலன்களில் இந்தியா ஒருபோதும் சமரசம் செய்யாது. அதற்கு நாம் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்பது எனக்குத் தெரியும், நான் தயாராக இருக்கிறேன். இந்தியா அதற்குத் தயாராக உள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அமெரிக்காவின் இந்த நடைமுறைக்கு பதிலடியாக, சீனாவில் நடைபெறவுள்ள சங்காய் கூட்டமைப்பின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சீனா பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் அங்கு செல்வது குறிப்பிடத்தக்கது.

**ஊடகவியலாளர் ... தொடர்ச்சி ...**

அனுப்பப்பட்ட அழைப்பாணையில், வாக்குமூலமொன்றை பதிவு செய்வதற்காக ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி காலை 10 மணிக்கு, முல்லைத்தீவு அளம்பில் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவிற்கு வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



## கிழக்கில் தமிழ் . .. தொடர்ச்சி ...

படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை என கிராமம் கிராமமாக ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1990ஆம் ஆண்டு சிறிலங்கா விசேச அதிரடிப்படையினருடன் சேர்ந்து சம்மாந்துறை மற்றும் அதனை சூழவுள்ள முஸ்லீம்கள் வீரமுனை தமிழ் மக்களை வெட்டிக்கொலை செய்து அக்கிராமத்திலிருந்து வெளியேற்றியிருந்தார்கள்.

அண்மைக்காலத்தில் தான் அவர்கள் மீண்டும் வீரமுனையில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

1990களில் வீரமுனை பிள்ளையார் கோவில் உட்பட சைவ ஆலயங்களில் தஞ்சம் அடைந்திருந்த தமிழ் மக்களை முஸ்லீம் ஊர்க்காவல் படையினர் ஈவிரக்கமின்றி வெட்டி கொலை செய்தனர். பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்தனர். கைக்குழந்தைகளை கூட இரண்டு துண்டாக வெட்டி வீசினர். வீரமுனை தமிழ் கிராமத்தில் தமிழர்கள் மீது 1990ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு சில படுகொலைகளை திகதி வாரியாக இங்கே தருகிறேன்.

- *20.06.1990 வீரமுனை பிள்ளையார் கோவில் படுகொலை அதிரடிப்படை மற்றும் முஸ்லீம் ஊர்க்காவல் படைகளால் 69 தமிழர்கள் படுகொலை*
- *05.07.1990 வீரமுனையில் 13 தமிழர்கள் படுகொலை.*
- *10.07.1990 வீரமுனையில் 15 தமிழர்கள் படுகொலை.*
- *16.07.1990 மல்வத்தை இராணுவத்தினரும் முஸ்லீம் ஊர்காவல்படையினருமாக சுமார் 30 பேர் 8 பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து படு கொலை செய்தனர்.*
- *26.07.1990 வீரமுனையில் 23 சிறுவர்கள் உட்பட 32 இளைஞர்கள் முஸ்லீம் ஊர்காவல் படையினராலும் விசேட அதிரடிப் படையினராலும் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர்.*
- *29.07.1990 ஆசிரியர் ஒருவர் குடும்பத்துடன் பஸ் ஒன்றில் வீரமுனையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த போது கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.*
- *01.08.1990 சவளக்கடையில் 18பேர் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர்.*
- *12.08.1990 வீரமுனை அகதி முகாமில் புகுந்த முஸ்லீம் ஊர்க்காவல் படை குழு வாள்களால் வெட்டி தாக்குதல் நடத்தியது. இதில் கோவில் தர்மகர்த்தா தம்பிமுத்து சின்னத்துரை உட்பட 14பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். வீரமுனையில் 600வீடுகளும், சம்மாந்துறை, மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி கணபதிபுரம், மல்வத்தை ஆகிய கிராமங்களில் இருந்த 1352 தமிழர்களின் வீடுகள் முஸ்லீம்களால் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டது.*
- *20.06.1990க்கும் 15.08.1990க்கும் இடைப்பட்ட காலத்தில் வீரமுனையில் மட்டும் 232 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் 1600க்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது. அயல் கிராமமான சம்மாந்துறையை சேர்ந்த முஸ்லீம்களே சிங்கள இராணு உதவியுடன் இப்படுகொலையினை செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*
- *கிழக்கு மாகாணத்தில் மோசமான தாக்குதலுக்கு உள்ளான பிரதேசங்களாக வாழைச்சேனை, செங்கலடி, ஆரையம்பதி, நீலாவனை, பாண்டிருப்பு முதலானவை காணப்படுகின்றன. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களால் தமிழ்க் கிராமங்கள் பல அழிவுற்றன.*
- *பரம்பரை பரம்பரையாகத் தமிழர்கள் வாழ்ந்து சூறையாடப்பட்டு இன்று சிதைவுக்குள்ளான கிராமங்களாகப் பாலமுனை, பாணமை, மீனோடைக்கட்டு, ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை, கரவாகு, தீகவாவி, மாந்தோட்டம், கொண்டா வெட்டுவான், பூரணி, செம்மணிக்குளம், தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் முதலானவை காணப்படுகின்றன.*



தமிழர்கள் வாழ்ந்தமைக்கான சுவடுகள் துடைத்தழிக்கப்பட்டு இக்கிராமங்கள் இன்று முஸ்லிம் கிராமங்களாக மாறியுள்ளன. இச்சூழலில் அம்பாறை மாவட்டத்தில் படிப்படியாக முஸ்லிம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் தமிழ்க் கிராமங்களாக அட்டைப்பள்ளம், சவளக்கடை, திறாய்க்கேணி, சொறிக்கல்முனை, மீராச்சோலை முதலானவற்றைக் கூறலாம்.

இப்பூர்வீகக் கிராமங்களில் பிறந்த தமிழர்கள் பலர் இவ்வன்முறையோடு தாக்குதல்க ளுக்கு உள்ளானவராகவும் தம் சுயமிழந்து அகதி அந்தஸ்து அங்கீகரிக்கப்படாதவர்களாகவும் காணப்படுகின்றனர் . முஸ்லிம் ஊர்க்காவல் படைகளால் இக்கிராமப் பெண்கள் பலர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதோடு மிலேச்சத்தனமான முறையில் படுகொலையும் செய்யப்பட்டனர்.

1990களில் திறாய்க்கேணி, நிந்தவூர், வீரமுனை முதலான தமிழ்ப் பிரதேசங்களில் முஸ்லிம் ஊர்க்காவல் படைகளால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் அறத்திற்குப் புறம்பானவை. திராய்க்கேணி பிள்ளையார் கோயிலில் உயிருக்கஞ்சி அடைக்கலம் புகுந்த தமிழ் இளைஞர்கள், யுவதிகளை அடித்தும் வெட்டியும் கொன்ற முஸ்லிம் ஊர்க்காவல் படையினர் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு சிங்கள இராணுவத்துடன் இணைந்து கோரமான கொலைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்தப் படுகொலையின் உடைய முக்கிய சூத்திரதாரிகளாக செயல்பட்டவர்கள் அன்றைய காலத்தில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட கொலை வெறியாட்டத்தின் பிரதான சூத்திரதாரியாக செயல்பட்ட இருந்த கொடூர கொலையாளியான கேப்டன் முனாஸ் (இவரின் இயற்பெயர் பிரீஸ் மாட்டின் காலி பிரதேசத்தைச் சேர்ந்த சிங்கள கிறிஸ்தவர்) மற்றும் மேஜர் ஷக்கி இவர்கள் இருவரும் மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியில் அமைந்திருந்த சிறைச்சாலை கட்டிடத் தொகுதியில் ராணுவப் புலனாய்வு அலுவலகத்து அமைத்து அங்கு தங்கி இருந்து கிழக்கின்தமிழ் மக்களுக்கு எதிரான அனைத்து படுகொலைகளையும் திட்டமிட்டு செயல்படுத்தி வந்தனர்

• • •

## பதவி இழக்கும் . .. தொடர்ச்சி ...


இந்த பிரச்சினைக்கு வேறு எந்த தீர்வும் இல்லை" என்று டிரம்ப் தனது சமூக வலைத்தளத்தில் எழுதியுள்ளார்.

குடியரசுக் கட்சி செனட்டர் டாம் காட்டன் புதன்கிழமை, இன்டெல் வாரியத் தலைவர் பிராங்க் யேரிக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து, டிரம்பின் கோரிக்கை வந்துள்ளது. அவர், பெய்ஜிங்குடனான டானின் உறவுகள் குறித்து கவலைகளை எழுப்பியிருந்தார். டானின் நேர்மை மற்றும் சீன நிறுவனங்களில் அவர் முதலீடு செய்ததாகக் கூறப்படும் முதலீடுகளால் ஏற்படும் தேசிய பாதுகாப்பு அபாயங்கள் குறித்து காட்டன் கேள்வி எழுப்பியுள்ளார் — சில முதலீடுகள் சீன மக்கள் இராணுவத்துடன் தொடர்புடையவை எனவும் கூறப்படுகிறது.

எனினும், டிரம்பின் இந்த கருத்துக்கு இன்டெல் மற்றும் டான் பதிலளிக்கவில்லை. டிரம்பின் பதிவிற்குப் பிறகு, இன்டெல் பங்குகள் சந்தைக்கு முந்தைய வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 5% சரிந்தன, இருப்பினும் பின்னர் அதிகரித்துள்ளன.

வாஷிங்டனுக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையே அதிகரித்து வரும் பதட்டங்களுக்கு மத்தியில் இந்த சர்ச்சை எழுந்துள்ளது. இரு நாடுகளும் தொழில்நுட்பம் மற்றும் குறைக்கடத்தி துறைகளில் நீண்ட காலமாக போட்டியிட்டு வந்தாலும், இந்த ஆண்டு ஆரம்பத்தில் டிரம்ப் சீன இறக்குமதிகள் மீது கடுமையான வரிகளை விதித்த பின்னர் அதனை கைவிட்டிருந்தார்.

இதனிடையே, அமெரிக்காவின் முக்கிய நிறுவனங்களில் உள்ள வெளிநாட்டவர்களை டிரம்ப் வெளியேற்றி வருவதால், அடுத்ததாக கூகுள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சையும் வெளியேற்றப்படுவாரா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்









